ஜனானந்த போதினி.

தொகுதி 8 - பகுதி 5

16 NOV 1922. 1922

JL

ஊ211, N15AB

M22.8.5

182442

69 M. 1190 Oct 1922 அக்டோபர் ஐப்பசி

ஆனந்த போதினி

ANANDA BODHINI.

Vol. 8. No. 4.

பொருளடக்கம்

		பக்கம்.
1.	கடவுள் வணக்கம் ...	121
2.	கடவுளுக்கு மனைவியுண்டோ?	124
3.	தமிழ் நாடகம் ...	129
4.	கையெழுத்து ..	131
5.	அப்பர் சுவாமிகள் ...	133
6.	காந்தியடிகள் திருத்தசாங்கம்	137
7.	இல்லறம்—கன்மம் ...	139
8.	ஒழுங்கான கல்வி ...	142
9.	பகவத்கீதை வசனம் ...	145
10.	உறுதியான தேசபக்தியுள்ள ஓர் உத்தமி ...	149
11.	பெண்களும் மேல்நாட்டுக் கல்வியும் ...	150
12.	மாணவர்களுக்கு ஓர் நற்புத்தி	153
13.	தபால் கொள்ளைக்காரர்கள் ...	157
14.	முக்கிய அறிவிப்பு: பொது சமாசாரங்கள் ...	159
1[illegible]	[illegible]ங்கம் ...	16[illegible]

போதினி [illegible] சந்தாதாரர்களுக்

2—4—0.

* சந்தாதாரர்கள் நம்பரைக் குறித்தால[illegible] புத்தகங்கள் அனுப்பப்படமாட்டாது.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்[illegible]

"ஆனந்தபோதினி"

சந்தா விவரம்.

		ரூ. அ. பை.
வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, ஸிலோன்	1—0—0
	பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு	1—4—0
	தனிச் சஞ்சிகை விலை	0—2—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

(3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணா யோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி. க்கு தபால் சார்ஜ் 0-0-6 ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம்தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாதமுடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகுதெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப்புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்து கொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும் இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாமபொறுப்பாளி யல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொருப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் ்லையாவது அனுப்பினாலன்றி விடையளிக்கப்பட மாட்டாது.

Life S.
ஜீவிய்scription / ்கா { இந்தியா, பர்மா, சிலோன் ரூபா 15—0—0
அன்னிய நாடுகளுக்கு ,, 20—0—0

்ஜிக ்

ஒரு பக்கத்திற்கு ஒ(
அரைப் பக்கத்திற்(
கால் பக்கத்திற்கு

எப்போதும் முழுத்(

ரூ. மனி ் மதல

முந்துங்கள்! முந்துங்கள்!

இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது.

நாவல்கள் தேவையான அனேக சந்தாதாரர்கள் ஒ(நாவலுக்கு ஆர்டர் செய்து விலை குறைத்து அனுப்பும்படி யெழு(கிறார்கள். ஆகையால், இந்த 1-வது பேஜ் முதல் 8-வது பேஜ் வரை உள்ள நாவல்களுக்கு அடியில் குறித்த தேதி வரை விலை குறைக்கப்பட் டிருக்கிறது. சந்தா நெம்பர் சரியாகத் தெரிவித்தால் தான் இதில் குறித்தமாதிரி அனுப்பப்படும். (30-11-22 வரையில்.)

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!! வெளியாய்விட்டது!!!

மிக்க அபூர்வமான] [துப்பறியும் நாவல்

இந்திராபாய்

அல்லது

இந்திரஜாலக் கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இதுமிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமானவைக ளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துகளி லிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காது விட்டால் பின்னால் அதற்காக உண்மையில் வருத்தப்படுவார்கள். உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது.

விலை ரூபா **2—8—0**. தபாற்கூலி பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு * 30-11-1922 வரையில் ரூபா **2—4—0**.

* சந்தாதாரர்கள் நம்பரைக் குறித்தாலன்றிக் குறைந்த விலைக்கு புத்தகங்கள் அனுப்பப்படமாட்டாது.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய
சரித்திரமும், உபதேசங்களும்.

சில வருஷங்களுக்கு முன்னர், அறியாத பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்து மதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்துமதத்தில் சேர்த்து, திக்விஜயஞ் செய்து வந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கும் இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவர் செய்த அற்புதச் செயல்கள் எத்தனையோ உண்டு. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பலவிதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக்கூடியவைகள்.

இத்தகைய மகானுடைய அற்புத சரித்திரங்களையும், நித்திய ஞானோபதேச மொழிகளையும் தமிழில் ஒரு புத்தகமாக்கி வெளியிட்டால் தமிழ் நாட்டார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, அன்னிய பாஷைகளிலிருந்து அவற்றை, சிறந்த வித்பன்னரைக்கொண்டு மொழி பெயர்ப்பித்து, உயர்ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றோம். இப்புத்தகம் கிரௌன் 16-ல் 400-பக்கங்கள்கொண்டது. பிழையின்றி அச்சிட்டு உயர்ந்த காலிகோ பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது.

ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமூக்ஷுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாது சங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை, பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர்லக்ஷணம், சன்னியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரியபோதனை, சித்திகள், கர்மநியதி, முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளுங் கூட ஆத்ம ஞானத்தை மனதில் உணரும்படி உலகத்தில் நடக்கும் சாதாரண விஷயத்தையே உதாரணங் காட்டித் தெளிவாக அது சொல்லப்பட்டிருக்கின்றது. எவரும் இவ்வுபதேசங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். ஒருவன் எளிதில் ஆத்மஞானத்தை அடைதற்கு இப்புத்தகமொன்றே போதும். இதனைப் படித்தால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிடத்தும் பெரிய நன்மையை அடையலாம். இது தமிழ் மக்களின் அதிஷ்ட வசத்தாலேயே இப்போது வெளிவந்துள்ளது. உலகநன்மையைக் கருதியே இக்கடுதாசிப் பஞ்சகாலத்திலும் இன்னை அச்சிட்டு இதற்குக்குறைந்தவிலையே ஏற்படுத்தியிருக்கிறோம். இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகானந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1 12 0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-8-0.

விலாசம் : **மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
நெ 6, வெங்கடேசமேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

பெரியபுராண வசனம்.

72 சித்திரப்படங்களுடன் விலை ரூபா 2-8-0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் ரூபா. 2.

ஓர் புதிய] # அமராவதி [நாவல்

அல்லது

அதிசய மர்மங்கள்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமிமுதலியா ரவர்களால் எழுதப்பட்டது.

இது பிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனா யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ் வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

நாவலை வாசிப்பதால் பயனடைய விரும்புவோர் இதிலிருந்து பல அரிய நீதிகளையும் புத்திமதிகளையும் நல்ல உலக அனுபவத்தையும் கிரகித்துக் கொள்ளலாகும். நாணயமான கடிதத்தில் அச்சியற்றப் பட்டது.

496 பக்கங்கொண்டது.

இதன் விலை ரூபா. 2. தபால் கூலி பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'-22 வரையில் ரூ. 1-12-0.

மஞ்சள் அறையின் மர்மம்

அல்லது

அபூர்வ துப்பறியும் சாமர்த்தியம்.

336-பக்கங்கள் கொண்டது.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமார்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமார்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

சுவர்ணாம்பாள்

அல்லது

பெருவிரல் மர்மம்.

ஓர் அற்புதமான துப்பறியும் நாவல்.

பேராசையானது மிக்க பாபச் செயல்களையும் செய்யத் தூண்டக் கூடிய கொடிய குற்றமென்பதும் முடிவில் அதனால் அவமானமும் இராஜ தண்டனையும் கிடைக்குமென்பதும் இன்னும் அநேக நீதிகளும் இதனால் நன்கு விளங்கும். துப்பறிபவன் கதவிற் பட்டிருந்த ஒரு பெருவிரற் குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் அவனுடைய சூட்சும அறிவும் சாமர்த்தியமும் தைரியமும் நன்றாய் விளங்கும். இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

புதிய **மங்கையர் பகட்டு.** நாவல்

"சுந்தராங்கி" என்னும் புஸ்தகத்தை இயற்றிய வடுவூர். K. துரைசாமி அய்யங்கார்பி.ஏ., இயற்றியது. இதுமிகவும் சுலபமான அழகிய அகவல் நடையில் புதுமாதிரியாக எழுதப்பெற்ற தமிழ்ப் புஸ்தகம். கதை பெரிதும் இன்பகரமானது. நம்முடைய தமிழ்ப்பாஷையின் அருமைபெருமைகளையும், அது தற்கால நாகரிகத்திற் கேற்ப எவ்வளவு எவ்விதமாக உபயோகப்படுத்தற் பாலதென்பதைப் பற்றியும், அறிய விரும்புவோரும், நம்முடைய பாஷையை அபிவிருத்தி செய்ய விரும்பிப் பாடுபடுவோரும் இதைப் படித்தல் அவசியமான விஷயம். இதைப்படிப்போர் மனதில் நற்குணநல்லொழுக்கம் நன்றாய்ப் பதிவதோடு தமிழ்பாஷையை மேல் மேலும் படிக்கவேண்டுமென்னும் ஒருவிதப் பேரவாவும் ஊக்கமும் அவர் மனதிற் குடிகொள்ளும். இந்த நூல் முக்கியமாய்ப் பெண்பாலருக்கு இன்றியமையாத பூஷணம். இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

பத்மாசனி

(இது ஓர் அதிசயமான துப்பறியும் கன்னிகை.)

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், கதாநாயகி, தன் அபாரமான துப்பறியும் சாமர்த்தியத்தாலும், தைரியத்தாலும், அக்கள்ளருடைய குற்றங்களை ரூபிக்க ருசுக்கள் கண்டு பிடித்து அவர்களது துர் எண்ணங்களை நிறைவேறவொட்டாமல் தடுப்பதும் ஒரு நிரபராதியின் மேல் வந்த அபாண்டமான கொலைக் குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறை மீட்பதும்தனது சிற்றப்பன் தன்னை வஞ்சித்து ஏராளமான சொத்தை யபகரிக்கச் செய்த துர்எண்ணங்கள் நிறைவேறவொட்டாமல், தான் அவனது வீட்டிலேயே மாறுவேடம் பூண்டு பணிப்பெண்ணாக அமர்ந்து தகித்து ஜயம் பெறுவதும் படிக்கப் படிக்க ஆனந்தத்தையும் விளைவிக்கும் நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலைஅணா 14.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கற்கோட்டை ...சியம்.

240

இஃது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பெற்று உல 564-பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ. 2. தபாற்கூலி ரூபாய்பெற்ற

இந்த அற்புதமான நாவல் நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசு ஒருவ கப்பட்டு வந்துகொண்டிருந்தது. இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாதா நேயர்களில் அனேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தரவேண்டுமென்று வல் பன்முறை கேட்டுக்கொண்டபடியால் இப்போதிருக்கும் காகிதவிலையையும் கருதாமல் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றவேண்டியதாயிற்று. முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இது நேர்த்தியான நாவல் என்று நாம் கூறவேண்டியது அனாவசியம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்பிரஷ்ட மடைந்த சில உயர்குல மகுடவர்த்தனர்கள் தலைமறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்று தப்பித்துக் கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும், சோகத்தையும், வீர ரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம்காதலர் பொருட்டாய், எவ்வளவுவரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச்சக்தியுடையவர்களா யிருக்கிறார்க ளென்பதை நன்கு விளக்கும். இக்கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதாபாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும், அவற்றின் பயன்களும், மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களெல்லாம் விளக்கிக் காட்டி யெழுதப் பட்டிருக்கிறது. காகிதவிலை ஏறியிருந்தாலும் அதற்குத்தக்க விலை யேற்படுத்தாமல் குறைந்த விலையே ஏற்படுத்தி யிருக்கிறோமென்பது புத்தகத்தைக்காணும் ஒவ்வொருவர்க்கும் விளங்கும். காகிதப் பஞ்சத்தால் சொல்ப காபிகளே அச்சிடப்பட்டன. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-12-0

மின்சார மாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும் அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அநுபவம்பெற அறிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம்வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அநுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. 328 பக்கங்கள் கொண்டது. ரூ. 1-8-0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ, 1-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

பீஷ்ம விஜயம்.

நமது பூர்வீக சரித்திரங்களுள் இதனைவிடச் சிறந்ததும் நீதிகளைக் கற்பிக்கக்கூடியதுமான உயர்ந்த சரித்திர மொதுவுமேயில்லை யென்று சொல்லலாம். ஸ்ரீராமாயணத்தில் பரதனுடைய சரித்திரம் எவ்வளவு சிலாக்கியமானதோ அவ்வளவு சிலாக்கியமான சரித்திரம் இது பாரதத்தில். பாரதம் என்பது ஐந்தாவது வேதமென்பர். அந்த ஐந்தாவது வேதத்தில், இது சிறந்த பாகம். பீஷ்மர், ஒப்புயர்வற்ற வீரர், ஸத்திய ஸந்தர்; பிதுர் பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், இராஜதந்திர நிபுணர்; கடவுட் பக்தி வாய்ந்த யோகி—இத்தகைய இந்த மகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன படிக்கப் படிக்க உருக்கமும் விவேகமும் தரக்கூடிய சரித்திரம் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்கவேண்டிய தவசியமாம். கேவலம் நாவலைப் போல் இது படித்துப் பார்த்து எறிந்துவிடத் தக்க நூலல்ல. போற்றத் தக்க உயர்ந்த நூல். இதுவரையில் ஒருவரும் இச்சரிதத்தை இவ்வளவு விஸ்தாரமாய் எழுதியதில்லை. இது பாரதத்தில் பல இடங்களிலும் சிதறுண்டிருக்கின்றமையினால் ஒருங்குசேரத் திரட்டிக்காட்டி யிருப்பது எல்லோரும் வியக்கத்தக்கது. இப்படிப்பட்ட சரித்திரம் நம் நாட்டுக்குத் தற்காலத்தில் வேண்டுமென்பது பலருடைய அபிப்பிராயம்.

இதில் பீஷ்மர் தமது தந்தையின் பொருட்டுத் தமக்கு விவாகம் வேண்டாமென்று சபதம் செய்வது படிப்பவர்க்குப் பயங்கரமாகக்கூடவிருக்கும். இதனால் ஆங்கிலத்தில் இவரை (Bhishmathe Terror) என்று பேசி யிருக்கின்றனர். 160 பக்கங்கள் கொண்டது. விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் அணா 8.

கீர்த்தி சிங்கன்.

இது கண்டிராஜன் கதை. இது நீதிகளடங்கிய சரித்திரமாதலின் இதனை ஒழுங்குப்படுத்தி நல்ல தமிழில் படிப்பவர்க்குத் தமிழ்ப்பாஷாபிவிர்த்திக் காதாரமாய் மேற்கோள்களுடனும் பழமொழிகளுடனும் இலக்கண வழுக்களின்றியும் எழுதி இருக்கின்றது. கண்டிராஜன் கதையை கையிலெடுக்க வொட்டாமற் புத்தகமாக்கி வெளிவந்த கொடுமையை ஒழிக்கவே இப் புத்தகம் எழுதலானோம். இதன் கதை விவரம் பலர்க்குத் தெரியுமாயினும் இப்புத்தகத்தில் படிப்பவர் இன்னும் இதில் நயம் கண்டு வியப்பும் உருக்கமு மடைவார் என்பதி லையமில்லை. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் அணா 6.

குணசுந்தரன்.

இது வாசிப்பவர் மனதைக் கரையச் செய்யும் ஒரு துப்பறியும் நாவல்.

கீழ்மக்கள் சாவகாசத்தால் தீமையே யுண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்கு அதிக ஆச்சரியமாகவிருக்கும். நிரபராதியான குணசுந்தரன் நன்மை செய்யப்போய் பிராணபத்தில் சிக்கிக்கொண்டு துயரப்படுதல் மிக்க சோபத்தையே தரும்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

விலாசம் ஆனந்தபோதினிஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்.

1-ம் பாகம் ரூ. 1 12 0 2-ம் பாகம் ரூ. 2 4 0

இது ஆங்கிலத்தில் நாவல் எழுதுவதில் ஒப்புயர்வற்றவ ரென்று உலகப் பிரசித்திபெற்ற G. W. M. ரெய்னால்ட்ஸ் என்பவரால் வரையப்பெற்ற அதியற்புதமான நாவல்களில் முதன்மை வாய்ந்தது. இதுகாறும் ஒருவராலும் தமிழில் எழுதப்படாதது. தற்காலத்திய தமிழ் நாவல்கள் எழுதுவதில் பிரக்யாதி பெற்றவரும் மேற்படி ரெய்னால்ட்ஸ் என்பவரின் நாவல்களில் பெரும்பாலானவற்றைத் தமிழில் மொழிபெயர்த் தெழுதியவருமாகிய ஸ்ரீமான் ஆரணி–குப்புசாமி முதலியா ரியற்றியது. தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட இந்நாவலில் அடங்கியுள்ள அதியாச்சரியமான விஷயங்களைக் கண்ணுற்ற சந்தாதார்கள் பெரும்பாலார் மேற்படி நாவல் தங்களுக்குப் பிரத்தியேகமாய் வேண்டு மென்று கோரியபடியால் அதைப் புத்தகரூபமாய் வெளியிட நேர்ந்தது.

இந்த நாவலில்தான் கிரந்தகர்த்தா தமது இணையற்ற சாமர்த்தியத்தை முழுதும் வெளியிட்டிருக்கிறார் என்பது ஆங்கிலத்தில் அவர் நாவல்களை வாசித்த யாவரும் அறிந்ததோருண்மையாகும். இதில் வேறு எக்கதைகளிலும் நாம் கேட்டிராத அற்புதமும் நெஞ்சுதிடுக்கிட்டுத் திகைக்கக்கூடியதுமான சூட்சிகள் (Plots) நிறைந்திருப்பதோடு, ஆடவர்களின் பலபேதமான நடவடிக்கைகளும் அதனாலடையும் பலன்களும், ஸ்திரீகளின் குணபேதங்களும், கற்புடைய ஸ்திரீகள் தங்கள் கற்பைக் காக்கும் விஷயத்தில் உபயோகிக்கும் துணிகரமான வீரதீர சாமர்த்தியச் செயல்களும் தெளிவாய் விவரிக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் தற்கால நாகரிகத்தை யொட்டி நமது நாட்டாருக்கு இன்னின்ன ஆசாரங்கள் நன்மை பயக்கு மென்றும்; இன்னின்ன ஆசாரங்கள் தீமை பயக்குமென்றும், நமது மாதர் கடைப்பிடிக்கவேண்டிய ஆசார வொழுக்கங்கள் இன்னின்னவை யென்றும் அந்தந்த சமயங்களில் மனதிற் றரிக்கும் வண்ணம் விவரிக்கப்பட் டிருக்கின்றன. இது ஆதிமுதல் அந்தம்வரையில் மனதை முழுதும் கவரக்கூடியதென்பது கூறாமலே விளங்கும். இதை வாசித்தோர்க்கு இந்த நாவலின் சிறப்பு எற்கெனவே விளங்குமாதலால் நாம் அதிகம் கூறுவது அநாவசியமே.

1-ம் பாகம் 508-பக்கங்களும், 2-ம் பாகம் 712-பக்கங்களும் கொண்டது.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில்

1-ம் பாகம் 1-10-0. 2-ம் பாகம் 2-2-0. 2-பாகமும் ரூ. 3-8-0

18742

புதிய] சதானந்தர் [நாவல்

அல்லது சமரபுரித் துறவியின் சம்சார வாழ்க்கை.

ஆய்ந்து பாராமல் ஆத்திரத்தால் தன் உத்தம மனைவியின் மேல் சந்தேகங்கொண்டு சந்நியாசியாகி மறுபடி மணம் புரிந்துகொண்ட ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இந்த நாவல் ஸ்ரீமான் நாகை சோ. தண்டபாணிப்பிள்ளை யவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இக்கதையால் எந்தக் காரியத்தையும் தீர்க்காலோசனை செய்து உண்மையை யறியாது அவசரப்பட்டுச் செய்வது பெருந்தவறென்பதும், உண்மை விரக்தி வராத சந்நியாசம் நிலைக்காதென்பதும், உத்தமமான மனைவி வாய்க்கபெற்றவன் சகல பாக்கியங்களையும் சந்தோஷத்தையும் பெறுவானென்பதும் இன்னும் பல உலக அனுபவங்களும் நன்கு விளங்கும். இது நேர்த்தியாக அச்சியற்றப்பட் டிருக்கிறது. விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

மலையாள பகவதி.

(ஓர் இனிய தமிழ்க் கதை.)

இது, அடங்கா நகைப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. இப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித்தவுடன் உண்டாகும் சிரிப்பு புத்தக முழுவதையும் படித்து முடித்த பின்னருங்கூட நெடுநேரம் வரை அடங்காதிருக்கும். பேய் பிசாசு பில்லிசூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெக ஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின் புளுகர், முதலிய சண்டப் பிரசண்ட யுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும் புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத் தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும். இது வேடிக்கைப் புத்தக மாயினும் ஒவ்வொரு வகையிலும் விவேகத்தை யுண்டாக்கத்தக்கது. தமிழபிமானத்தை விருத்தி செய்யத்தக்கது. 247-பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ. 1.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-11-'22 வரையில் அணா 14.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இரண்டாம்] ஆனந்தஸிங் [பதிப்பு.

(11-துப்பறியும் கதைகளடங்கிய கதைக் களஞ்சியம்.)

ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தஸிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணை யற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். இந்த நாவல் முழுமையும் புத்திக்கு மிக்க நன்மையளிக்கும் உணவு நிறைந்திருக்கிறது. 492-பக்கங்கள் கொண்டது. இதில்நூலாசிரியருடையஆப்டோன் படமும்சேர்க்கப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தி லடங்கிய கதைகள்.

1. ஆனந்தஸிங் அல்லது அற்புதத் துப்பறி நிபுணன்	7. ஆறு நெபோலியன்களின் அதிசயம்
2. பள்ளத்தெருப் படுகொலை	8. மூன்று மாணவர்களின் மர்மம்
3. மாயக்களவு	9. பொன் கண்ணுடியின் மர்மம்
4. காட்ரேக் கடுங்கொலை	10. அபயமாளிகை யதிசயம்
5. மாயஜாலம் கற்ற மர்ம சுந்தரம் பிள்ளை	11. மாயாண்டிப் பிள்ளையின் முடிவு.
6. இண்டாவது கறையின் மர்மம்	

இதன் விலை ரூபா 2—0—0 தபாற்கூலி வேறு.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-12-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8	துந்துபிஸு கார்த்திகைமீ கஉ 1922ஸு நவம்பர்மீ 16உ	பகுதி 5

கடவுள் வணக்கம்.

1. கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
    கருணைசிறி தேது மில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
    காதலித் திடுநெஞ் சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைதரு
    பொருந்துகுண மேது மறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
    புருஷார்த்த மேது மில்லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
    கெவ்வண்ண முய்வண் ணமோ
இருவினையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
    மெனக்குநின் னருடா ரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
    வஞ்சகனை யாள நினையாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
    மரபில்வரு மௌன குருவே.

2. குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
மிலமி லான்மைந்தர் மனைவியில் லானெவ னவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.

3. கடத்தை மண்ணென வுடைந்தபோ தோவிந்தக் கருமச்
சடத்தைப் பொய்யென விறந்தபோ தோசொலத் தருமம்
விடத்தை நல்லமிர் தாவுண்டு பொற்பொது வெளிக்கே
நடத்தைக் காட்டியென் னுயிரையு நடப்பிக்கு நலத்தோய்.

அரும்பொருள் விளக்கம்

1. புருஷார்த்தம்=புருடன் அடையவேண்டியது. அறம், பொருள், இன்பம், வீடு என்று புருடார்த்தங்கள் நான்கெனப்படும்

எல்லாமறிந்த நீ=சர்வக்ஞனாகிய நீ

நின் அருள் தாரகம்=(உன்னைச் சரணாகதியாக அடைந்த எனக்கு) உன் திருவருளே ஆதாரமாகும்

வல்லானெனும் பெய...யாள நினையாய்=நீ சர்வவல்லமையுடையவனாக இருக்கிறாய். வஞ்சகனாகிய அடியேனை யாண்டருள நினைக்க வேண்டும்.

2. குலமிலான்=இன்ன குலம் இன்ன ஜாதி யென்ற பேதமற்றவன்

குணமிலான்=குணவேறுபா டில்லாதவன். அதாவது காமம், குரோதம், பொய், சூது, பொறாமை முதலிய ஒரு குணவேறுபாடுமின்றி சதா ஒரே சாந்த சொரூபமாய் விளங்குபவன். அவனை யின்ன குணமுடையவன் என்று பகுத்துரைக்க முடியாது

குறியிலான்=பெயர் முதலிய அடையாள மொன்று மில்லாதவன்

குறைவிலான்=இன்னது வேண்டு மென்ற இச்சை யில்லாதவன்—விராசை யுடையவன்

கொடிதாம் புலமிலான்=கொடிதாகிய புலன்களின்வழியே மனதோடுசென்று விஷயங்களைப் பற்றாதவன். சதா சாக்ஷிமாத்திரமா யிருப்பவன்

தனக்கென்ன ஓர் பற்றிலான்=என்வீடு, என்பிள்ளை, என்பொருள், என்தேகம் என்றவை போன்ற எவ்விதப் பற்றுமில்லாதவன்—புறப்பற்றை யடியோடொழித்தவன்

பொருந்தும் இலம் இலான்=இன்ன இடத்தில்தான் வசிப்பது, தங்குவது என்ற நியதியற்றவன்—அதாவது தேசபரிச்சேதமற்றவன்

மைந்தர் மனைவி யில்லான்=குடும்பப் பற்றில்லாதவன் (இவ்வாறுளவன் உளனே அவன்)

சஞ்சலமிலான்=மனச்சலன மற்றவன்

(மேற்கூறப்பட்ட இலட்சணங்கள் பரமசிவத்தினிடத்திலும், பிரம்மாத்ம ஐக்கிய நிலையாகிய சமாதி நிலையிலேயே சதா இருக்கும் முற்றத் துறந்த ஞானியினிடத்திலுமேயுள—மமதை, அகந்தை யிவைகளின் காரியங்களினின்றும் விடுபட்டு சச்சிதானந்த சொரூபமாய் விளங்குவதில் பிரம்மஞானி பிரம்மமே என்று சுருதிகூறுவதாலும், பிரம்மஞானியைத் தரிசித்தோர் திரிமூர்த்திகளையும் தரிசித்தோராவர் என்று கூறப்பட்டிருப்பதாலும் அத்தகைய இலக்ஷணங்களை யுடையவன் சலனமற்றவனாவதோடு அவனைப் பரமசிவன் எனத்தகும் என்றார்.

3. பொற்பொது வெளி=பொன்னம்பலமாகிய சிதாகாசவெளி

நடத்தைக்காட்டி=நடனம் செய்து காட்டி

பொன்னம்பலத்தில் பரமசிவம் செய்யும் தாண்டவம் பஞ்சகிருத்தியத் தாண்டவமாகும்:—

(1) உடுக்கை=சிருட்டி, (2) அணைத்தகரம்=திதி, (3) மழு=சங்காரம், (4) மிதிக்கும் பதம்=திரோபவம், (5) தூக்கியபதம்=அநுக்கிரகம்.

“நடத்தைக்காட்டி எவ்வுயிரையும் நடப்பிக்கும் நலத்தோய்”—ஆண்டவன் செய்யும் பஞ்சகிருத்தியத் தாண்டவமே உலகில் பஞ்சகிருத்தியங்களும் இடைவிடாது நடந்துகொண் டிருப்பதற்குக் காரணமாதலின் அவ்வாறு கூறினார். ஆண்டவன் அவரவர்கள் உள்ளமாகிய சிதாகாசத்தில் நடனம் புரிந்துகொண்டே அவரவர்களை அவரவர் வினைவழியே உலகமாகிய மேடைமேல் ஆட்டிவைக்கிறான்.

(நாமறியாதபடி நமது உள்ளமாகிய சிதாகாயத்தில் நர்த்தனம் புரியும் பரம்பொருளை யுள்ளத்தில் தரிசிக்கவேண்டும் என்பதை யறிவிப்பதற்கே பொன்னம்பலமென்னும் சிற்சபையில் பரமசிவம் நடனம் புரிகிறார் என்றறியவேண்டும்).

ஆனந்தபோதினி

துந்துபி௵ கார்த்திகை௴ கஉ

உயர்ந்த நாகரீகம்

இப்போது உலகில் தற்சமயம் எதை யுயர்ந்த—மேலான—சீர் திருத்தமடைந்த நாகரீகம் என்று கூறுகிறார்கள்? அவ்வாறு கூறப்பட்ட நாகரீகத்தின் உண்மை நிலைமை யெப்படி யிருக்கிறது என்பதைச் சற்று கவனித்துப் பார்ப்போம். கொஞ்சக்காலத்திற்கு முன்வரையில் ஆசியாகண்டமே நாகரீகமற்ற கண்டமாகக் கருதப்பட்டது. இந்தியராகிய நாம் அநாகரீகமான ஜனங்களென்று கருதப்பட்டு வந்தோம்.

இப்போது ஆதி முதல் நம்நாடே நாகரீகத்தில் சிறப்புற்று விளங்கியிருந்த தென்று யாவரும் அறிந்துகொண்டு அவ்வாறே ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் இப்போது நாம் நாகரீகத்தின் உயர்படியி னின்றும் இறங்கிவிட்டோ மென்றும், இனி நாம் நாகரீகத்தில் சீர்திருத்த மடையவேண்டு மென்றும் கூறுகிறார்கள். அதோடு உலகத்தில் இப்போதுள்ள நாகரீகத்தில் மேல்நாட்டு நாகரீகமே முதல் தரமான தென்கிறார்கள். நம்மவரிலேயே சிலர் மேல் நாட்டு நாகரீகத்தையே நாம் கைப்பற்ற வேண்டு மென்கிறார்கள். மேல் நாட்டு மதஸ்தரில் சிலர் கிருஸ்துமதமே நாகரீகத்திற்கும் செல்வத்திற்கும் காரணம் என்கிறார்கள். ஆலோசித்துப்பார்த்தால் இவற்றில் உண்மையில்லை யென்பது நன்கு விளங்கும்.

நாகரீகம் என்பது எது என்ற உண்மையை நோக்கும் பட்சத்தில் நமது பூர்வீக நாகரீகம் ஓடிப்போய் விடவில்லை யென்றும், இப்போது நாம் அநாகரீகராய் விடவில்லை யென்றும் நன்றாய் விளங்கும்.

அவ்வாறே நமது நாகரீகம் இப்போது பிரகாசிக்காததற்குக் காரணம், நாம் செல்வத்தில் குறைந்து தரித்திர சிகாமணிகளாய் விட்டிருப்பதோடு தேசபக்தியும் ஒற்றுமையும் குன்றி சுயமதிப்பை யிழந்திருப்பதே என்று விளங்கும். மேல்நாட்டு நாகரீகம் உயர்ந்ததென்று கொண்டாடப்படுவதற்கும் செல்வமே காரணம். அப்படிக்கொண்டாடும் நம்மவர்கள், அவ்வாறு கொண்டாடுவதும் அந்த நாகரீகத்தைப் பின்பற்றுவதுமே கௌரவம் என்றும், அப்படிச் செய்தால் மேல்நாட்டாரிடம் நமக்குச் செல்வாக்குண்டாகு மென்றும் கருதுகிறார்கள். ஆசார ஈனர்களாய் தமோகுண சுபாவத்தால் மதுமாமிசாதிகளைப் புசிக்க ஆசைப்பட்டு எத்தனையோ பேர் தாங்கள் விசாலமான மனதோடு நாகரீகத்தைச் சீர்திருத்துவதற்காக ஜாதிக் கட்டுப்பாட்டை யொழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள்.

மதத்தால் நாகரீகமும் செல்வமும் உண்டாயிற்றென்பது பெருந்தவறே யாகும். மதத்திற்கும் செல்வத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. மதம் கடவுளை யடையும் மார்க்கத்தைக் காட்டுவதாதலின், அதற்கு மார்க்கம் என்றே பெயர். மதம் "கடவுளையடைய நீ விரும்பினால் உலகபோகங்களிலும் செல்வத்திலும் உள்ள ஆசையை யறவே யொழிக்கவேண்டும். இன்றேல் ஆண்டவன் அருள்கிட்டாது" என்று போதிக்கிறது. ஆனால் இக்கலிகாலத்தில் செல்வத்தாலும் செல்வாக்காலும் மதம் பிரகாசிக்கிறது என்லாம். மேல்நாட்டாருக்குச் செல்வம் மதத்தால் வரவில்லை. வர்த்தகத்தாலும் தந்திர சாமார்த்தியங்களாலும் வல்லமையாலுமே

செல்வம் வந்தது என்பது வெளிப்படையா யாவருமறிந்த விஷயமாகும்.

கலிகாலத்தில் யாவும் தலைகீழ் பாடமாக விருப்பது சுபாவமேயாதலின்—மனிதர் உள் விஷயத்தை யறியாமல் வெளித் தோற்றத்தையே கண்டு நாகரீகமென மகிழ்ச்சி யடைகிறார்கள். மேல் நாட்டார் மேஜைமேல் சீலைவிரித்து அதன்மேல் பாத்திரங்களில் ஆகாரத்தை வைத்து முள் கரண்டிகளால் எடுத்துப் புசிக்கிறார்கள் என்றும் அதுவே நாகரீகமென்றும் நாம் தரையில் உட்கார்ந்து கையால் அள்ளிப் புசிப்பது அநாகரீகமென்றும் சிலர் கூறுகிறார்கள். சில அறிவாளிகள் அதோடு நிற்காமல் உடற்சட்டை கால் சட்டை பாதரட்சையோடு வீட்டிலிருந்தும் பாத்திரத்தில் வரும் ஆகாரத்தை மேஜைமேல் அப்படியே வைத்துக்கொண்டு புசிக்கிறார்கள். மறுபடி அவர்கள் "நாங்கள் உயர்குல ஆரிய சிகாமணிகள், பறையன் எங்கள் கிட்ட வரலாகாது" என்கிறார்கள்.

மேல்நாட்டார் கரண்டிமுள்ளால் சாப்பிடுவது நாகரீகத்தாலல்ல. அவர்கள் தேசாசாரமே யதற்குக் காரணம். ஆதியில், அதாவது இரண்டாயிர மூவாயிர வருடங்களுக்குமுன் மேல்நாட்டார் மாமிசம் மச்சம் கிழங்கு முதலியவைகளை மட்டும் அவித்தும் சுட்டும் பச்சையாகவுங்கூட அருந்திவந்தார்கள். நமது நாட்டாரில் மாமிச மச்ச பட்சணிகள் அவற்றைச் சிறு துண்டுகளாக்கிப் பலவித மசாலாக்கள் சேர்த்து நன்றாய் வேகச்சமைத்தே யுண்கிறார்கள். மேல்நாட்டாரோ ஒவ்வொரு துடையை யப்படியே அனலில் வாட்டி பாதிவேக்காட்டில்(Half Roast)நாளைக்கும் உண்கிறார்கள். இக்காரணத்தால் அவர்களுக்குக் கத்தியும் முள்ளும் வேண்டியது அவசியமாயிற்று. கிராமாந்தரங்களில் நாளைக்கும் பெரு விருந்துகளில் ஆடு மாடு பன்றி முதலிய மிருகங்களை இரண்டு மூன்றே துண்டுகளாக்கித் தீயில் வாட்டி (சில இடங்களில் உப்பில்லாமலே கூட) உண்கிறார்கள்.

காய்களை யப்படியே முழுசாக அவித்து உப்பு, ஒரு சமயம் கொஞ்சம் மிளகுத்தூளும், தூவி உண்கிறார்கள். இன்றேல் மாமிசத் துண்டுகளோடு போட்டு அவித்து உப்புத்தூள் சேர்த்து (Soup) அருந்துகிறார்கள். வேறு விதமில்லை.

இதைப்பற்றி யதிகமாய்க் கூறுவது அனாவசியம். இப்போது இந்த இரண்டில் மேல் நாட்டார் உண்பது நாகரீகமா நமது நாட்டார் உண்பது நாகரீகமா என்பதை யறிவாளிகளே சிந்திக்கலாகும். மேல் நாட்டு நாகரீகத்தால் நம் நாட்டில் உண்டாயிருக்கிற வித்தியாசங்களைக் கவனித்துப் பார்த்தால் அதனால் நன்மையா தீமையா வென்பது நன்கு விளங்கும். மேல் நாட்டு ரீதி

யாகிய கல்வியால்கூட பல கெடுதிகள் உண்டாகிறதெனின் மற்ற விஷயங்களைப்பற்றிக் கூறவேண்டியதின்றாம்.

இதற்குக் காரணம் என்னவெனில், மேல் நாட்டார் மத விஷயங்களை மிகச் சுருக்கிவிட்டு உலக போகங்களை யனுபவிப்பதையே பிரதானமாகக் கொண்டிருக்கிறார்கள். ஏசுக்கிருஸ்துவின் போதனைகளைப் புத்தகத்திலேயே கட்டி வைத்துவிட்டார்கள். அம்மகான் கொலை செய்யாதே என்றால், அவர்கள் மனிதன் தவிர மற்ற ஜீவன்களைக் கொல்வது பாபமல்ல, மனிதனைக் கொல்வது மட்டுமே பாபம் என்று வியாக்கியானம் செய்துகொண்டார்கள். இப்போது அதையும் தள்ளிவிட்டு, "உன் விரோதிக்கும் நன்மையே செய்," "அவன் கெடுதி செய்தாலும் நீ பதிலுக்குச் செய்யாதே" என்று அம்மகான் கட்டளையிட்டுப் போயிருக்க, அவர்கள் குறைந்த காலத்தில் பல்லாயிரக் கணக்கான மனிதரைக் கொல்வதற்குத் தங்கள் சாத்திர ஆராய்ச்சியையும் புத்தியையும் உபயோகித்து விஷக்காற்றுகளை யுண்டாக்கி நாடு நாடாய் அப்படியே அழித்துவிட வழி கண்டுபிடிக்கிறார்கள். ஜனங்கள் பாபங்களைச் செய்யாதபடி அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசன் கடமை. கிருஸ்துமத இராஜாங்கங்களே யிப்போது மேல் கண்ட மாதிரி ஏககாலத்தில் இலக்ஷக் கணக்கான மனிதரைக் கொல்ல வழி கண்டு பிடித்துக்கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள சுதேசிகள் விஷம் வைத்த அம்பால் தங்கள் எதிரிகளைக் கொல்வதால் அவர்கள் சுத்த அநாகரீகமான காட்டு மிராண்டிகள் என்றும், போயர் சண்டையில் சில போயர்கள், தேகத்தில் நுழைந்ததும் வெடிக்கும் ஒருவித குண்டுடைய தோட்டாக்களை யுபயோகித்தார்கள் என்று அவர்கள் கிருஸ்து மதத்திற்கு மாறாக நடக்கும் கொலைபாதகர்களென்று தூஷித்த இந்த மேல் நாட்டு இராஜாங்கங்கள் இப்போது விஷப் புகையாலும், விஷ நீராலும் ஜனங்களை இலட்சக்கணக்காய் மாய்க்கத் துணிந்திருக்கின்றன.

அவர்களுடைய குருமார்களோ தங்கள் ஜனங்கள் தமது மதக் கோட்பாடுகளுக்கு முழுதும் மாறாக நடந்து, பூமி பொன் அதிகாரம் இவற்றிலுண்டான பேராசையால் உலகிற்கே யழிவைத் தேடிப் பெரும் பாபத்திற் காளாகிறார்களே யென்பதைச் சிந்தித்து, அவர்களை நல்வழிப் படுத்துவதை விட்டு, கொல்லர் தெருவில் ஊசிவிற்க முயல்வதுபோல் ஜீவகாருண்யமே அஸ்திவாரமாகவுடையதும் பூரண மானதுமாகிய மதத்தை யனுசரிப்போர்க்கு மத போதனை செய்ய வருகிறார்கள். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜீவர்களிடத்திலும் அன்பு காட்டி யொழுகுவது நாகரீகமா? அழிந்துபோகும் மண், பொன் முதலியவற்றிற்காக

ஜன சமூகத்தைக் கொன்றழிப்பது நாகரீகமா? மானிட வர்க்கத்தைச் சேர்ந்த யாவரும் ஒரே கடவுளின் மக்கள் என்பதையுணர்ந்து எல்லோரையும் சகோதரராய்ப் பாவித்து, பிறர் க்ஷேமத்தைக் கருதி, யார்க்கும் நன்மையே புரிந்து வாழ்வது நாகரீகமா? அல்லது "நம் ஜாதியே மேலோங்கி வாழவேண்டும். நம் ஜாதியே செல்வம் பெறவேண்டும், அதிகாரம் செய்ய வேண்டும்; மற்ற ஜாதியை நம்மினும் தாழ்ந்ததாய்க்கருதி நடத்தவேண்டும்" என்று கருதித் தம்மவரையெல்லா விஷயங்களிலும் மேன்மையாகவும், பிறரைத் தாழ்மையாகவும் நடத்துவது நாகரீகமா?

கிடைத்த வரையில் திருப்தி யடைந்து நம்மால் பிறருக்கு எவ்வித வருத்தமும் நேராது நடந்து கொள்வது நாகரீகமா? பேராசை கொண்டு அதைத் திருப்தி செய்ய நம்மினும் வலி குறைந்தவர்களை யழித்து நாம் மேலேறக் கருதுவது நாகரீகமா?

தண்டிக்க வல்லமை யிருக்கும் போதே நமக்கு ஒருவர் தீங்கு செய்தாலும் பொறுமையோடு அதினின்று விலகிக்கொள்ளும் சாந்த குணம் நாகரீகமா? அல்லது நெல்லாலடித்தவனைக் கல்லாலடிக்கும் மிருகத் தன்மையான கொலைக்கஞ்சாத தமோ குணம் நாகரீகமா?

மது மாமிசாதிகள் சுருட்டு முதலிய தமோகுண வஸ்துக்களை யுபயோகிப்பது நாகரீகமா? அல்லது காய்கனி கிழங்கு தானியம் முதலிய சத்துவ பதார்த்தங்களை யருந்தல் நாகரீகமா?

கடவுளிடத்தில் பக்தி செலுத்தி நித்திய பதவியாகிய பேரின்பத்தை யடைய முயல்வதையே நாம் இந்த ஜன்மத்தில் செய்ய வேண்டிய முக்கிய வேலையாகக் கருதுவது நாகரீகமா? அதை யலட்சியம் செய்துவிட்டு, அநித்தியமாகிய உலக சிற்றின்ப போகங்களை யனுபவிப்பதையே நாம் ஜன்மமெடுத்ததன் பயனாகக் கருதி நடப்பது நாகரீகமா?

உலக வாழ்க்கைக்கு முக்கியமான உணவுப் பொருள்களும் உடையும் தாராளமாய் இருக்கும் வண்ணம் செய்துகொண்டு மனதிற்கு அதிக அலைச்சலும் ஆவலும் உண்டாகா வண்ணம் நிம்மதியோடு காலத்தை ஈசுர சிந்தனையில் கழிப்பது நாகரீகமா? அளவு கடந்த செல்வத்தையே கோரி, உணவுக்கும் ஆடைக்கும் கஷ்டப்பட்டுக்கொண்டு மனதிற்கு முடிவில்லா அலைச்சலையும், மேலு மேலும் அவாக்களையும் உண்டாக்கிக்கொண்டு ஒரு விநாடிகூட மனதிற்கு ஓய்வளிக்காமல், வாழ்நாளைக் குறைத்துக் கொண்டு அந்தகனுக் காளாவது நாகரீகமா? அறிவாளிகள் இவற்றைச் சிந்தித்தால் உண்மை விளங்கும்.

மேல்நாட்டு நாகரீகத்தால் நமக்குண்டா யிருக்கும் பயன்களில் சிலவற்றை மட்டும் கூறுகிறோம் :—

1. நமது சிறுவர் நமது ஆசாரங் குன்றி துராசாரங்களில் பழகுகிறார்கள். நமக்குரிய ஈசுரபக்தி, தெய்வ வழிபாடு முதலிய சற்கிரியைகள் குன்றி, உலகபோகங்கள் ஒன்றிலேயே நாட்டமுடைய உலகாயத நடையில் திரும்புகிறார்கள். மிக்கசிறு வயதுடையவர்களும் பகிரங்கமாய் பீடி—ஸிகாரெட் பிடிப்பதும், பெரியோரிடம் மரியாதையின்றி நடப்பதும் சாதாரணமாய் விட்டது. அதிலும், மேல்நாட்டு முறையில் கல்விகற்கும் சிறுவர்களிடமே அவை பெரும்பாலும் காணப்படுகின்றன. சுதேச வர்த்தகர்களிடம் வேலைசெய்யும் சிறுவர்களிடமும், சுதேசபாஷை கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர்களிடமும் இத்தகைய துர்ப்பழக்கங்களைக் காண்பதரிது. அப்பழக்கத்தாலுண்டாகும் கெடுதியை நாம் கூறவேண்டியதில்லை. அவை யாவருமறிந்தவையே.

2. உலக அனுபவமும், நாமும் நமது தாய்நாடும் முன்னிருந்த நிலைமையும், இப்போதிருக்கும் நிலைமையும், நாம் எவ்வாறு முன்னேற்ற மடையலாமென்ற மார்க்கமும் ஒன்றுமறியாத நிலைமையிலிருக்கும் சிறுவர்களுக்கு வெளித்தோற்றத்தால் நாகரீக மயக்கம் ஏறுவதால், சுதேசவஸ்துக்களிலும், நம்நாட்டில் செய்யப்பட்ட சாமான்களிலும் பிரியங்குன்றி அன்னியநாட்டுப் பொருள்களிலேயே விருப்பம் அதிகமாகிறது. இதனால் மிகக் குறைந்த வருமானமுடைய நமக்குச் செலவதிகமாவதோடு நாம்செலவழிக்கும் பணமும் அன்னியநாடுகளுக்கே செல்ல, நமதுநாட்டு விவசாயம் கைத்தொழில் முதலியவை குன்றித் தரித்திரம் மேலிடுகிறது. இவ்வாறு சென்றுகொண்டே யிருந்தால் முடிவில் நமதுகதி அதோகதியே.

மற்ற நாட்டாரெல்லாம் தங்கள் நாட்டின் க்ஷேமத்தில் கண்ணும் கருத்தும் வைத்துத் தங்கள் நாட்டுப்பொருள் எவ்வளவு தாழ்ந்தநிலைமையி லிருந்தாலும் அதையே சிலாக்கியமாகக் கொள்கிறார்கள். நமது நாட்டார்க்கோ முக்கியமாய் நமதுநாட்டில் உற்பத்தியான ஆடையை அணிவதே எட்டிப்பழம் புசிப்பது போலிருக்கிறது. அந்தோ இது எவரிட்ட சாபமோ? எப்போதுதான் இந்த வெட்கக்கேடான குணமும் நடக்கையும் நம்மவரை விட்டொழியுமோ! கடவுளே! கடவுளே!

மேல்நாட்டு நாகரீகத்தில் மயக்கங்கொண் டிருக்கும் நண்பர்கள் இனியேனும் கண்விழித்து, தாய்நாட்டின் க்ஷேமத்தைக் கருத்தில் வைத்து நடப்பார்கள் என்று நம்புகிறோம். பரம்பொருள் அருள் புரியப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

தாயை மறப்பது தர்மமா.

சைவசமயமே சமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே.

இந்து சகோதர சகோதரிகாள்,

எந்நாட்டிற்கும் நன்னுடைய விளங்கும் புண்ணிய பூமியாகிய பாதகண்டத்திலும் ஈழநாட்டிலும் வாசம் செய்யா நின்ற நமது குலத்தினரின் சைவச் சிறுவர் சிறுமிகளை மிலேச்ச மதகண்டத்தின் சங்கங்களால் ஸ்தாபிக்கப் பட்டிராநின்ற வித்தியாலயங்களுக்கு ஆங்கிலம், திராவிடம் முதலான பாஷைகளைக் கற்குமாறு அனுப்பிவைப்பது என்னமதியோ? அறிகிலேன். அந்தோ! இவர்களின் கூற்றை என்னென்றுரைப்பேன். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கலைகின்றவன் பான்மைபோலிருக்கின்றதன்றோ.

நமது யாழ்ப்பாணநாட்டின்கண் "யாழ்ப்பாண இந்துக் கல்லூரியும்" இன்னும் எங்கள் கல்வித்தடங்கடலாகிய நன்னய விற்பன்னரும் ஔதாரிய புருஷரும் ஆண்டொழில் மன்னரும் அஞ்சாநெஞ்சரும் ஆகியகலியுக இராமனென எவராலும் புகழ்ந்தோதப்படும் கௌரவம்சேர் இராமநாதன் துரை அவர்களால் இன்னவேலியில் "பரமேஸ்வர கல்லூரியும்" மருதனுமடத்தடியில் பெண்களுக்காக "இராமநாதன் கல்லூரியும்" இன்னும் பல சைவாபிமானிகளால் மானியம்பதியில் "மானிப்பாய் இந்துகல்லூரியும்" சுளிபுரத்தில் "விக்டோரியா கல்லூரியும்" இன்னும் ஆங்காங்கு சைவ பாடசாலைகளும் விளங்காநிற்க அவைகள் எல்லாவற்றையும் அலட்சியம் செய்து நமது மதத்தையும் மாந்தரையும் கவர்ந்து கொள்ள வழிபார்த்துக் கண்ணுங் கருத்துமாய் நிற்கும் பெரும் பூதங்களாகிய விஷநரிமார்களின் மோசத்திற்கு அகப்படும் வண்ணமாக "யானை தன்னைக்கட்ட சங்கிலி தானே எடுத்துக்கொடுத்த வாறதுபோலும்" "சன்னப்பன் வீட்டுக்கோழி தானே விலங்குமாட்டிக் கொண்ட சீலம்போலும்" தங்கள் உதிரக்கனிகளாகிய புத்திரர்களைப் பறிகொடுத்து விட்டுப் பின்பு தயங்கி மயங்கிப் புலம்பி நிலைகுலைந்து கலங்கி நிற்கும் மதியீனம் என்னவோ? அம்மம்ம! இம்மட்டோ? நமது பிள்ளைகள் ஆசார முறைப்படி சிவ சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்ஷம் முதலியவைகளை அணிந்து சென்றால் அப்பாடசாலைகளிலுள்ள, கிறீஸ்தவ உபாத்திமார்கள் ஏ, பிள்ளையே, உன் நெற்றியில் மாட்டின் சாணத்தா லுண்டாகிய சாம்பலை ஏன் வீணாகப் பூசிக்களிக்கிறாய் என்றும், விக்கிரக ஆராதனையினால் யாதுபயன் என்றும் வீண்போலி நியாயங்களெடுத்துக்காட்டி மருட்டி வெருட்டி எங்கள் கிறீஸ்துவை நம்பினால் இரட்சிப்படையலாமென்றும் பூரண அறிவில்லாச் சிறுவர் சிறுமிகட்குச் சிற்

சில மதபோதனைகளைப் புகட்டித் தீராத துன்பவலையில் மாட்டி மயக்கி மந்திரோபதேசம் செய்யப் புகுந்த பரமாசாரியார்களின் கள்ளத்தனங்களைப் பல்லாயிரமுறை பார்த்தும் கேட்டும் இன்னும் மூடமதிகொண்டிருப்பது பெரும் சஞ்சலத்திற் கிடமே. அந்தோ! இம்மட்டோ சைவப்பிள்ளைகளை உபாயமா யிழுத்துப் பள்ளிக்கூட விகிதமின்றியும் புத்தகங்கள் இனாமாயீந்தும் அவர்களுக்குரிய சொந்தப் பெயர்களை மாற்றியும் மேலத்தேசத்து நாமங்களைச் சூட்டியும் தங்கள் மதத்தின் ஸ்தூல சூக்ஷ்ம தாற்பரியங்கள் இன்னதெனத் தெரிந்திராத இப்பிள்ளைகளின் பெற்றோருக்குச் சொற்பப் பொருளுதவி புரிந்தும் உத்தியோகம் கொடுத்தும் இடையிடையே அன்னவரின் வீடுகடோறும் சென்று தொப்பியைக் கழற்றிக் கக்கத்திலிடுக்கிக்கொண்டு புன்னகையுடன் காலை வந்தனம் (Good morning) ஐயா காலைவந்தனம் (Good morning) அம்மா என்ற உபசார வார்த்தைகள் மொழிந்தும் "கிறீஸ்துவை நம்பினாலென்ன" என்னும் சிற்சில பசப்புவார்த்தைகளைப் பாஷித்தும், எங்கள் ஆலயத்திற்கு ஆதிவாரங்கடோறும் வாருங்கள் என்றன்புட னழைத்தும், அரும்பெரும் ஆசனங்கள் அளித்தும் கைலாகு கொடுத்தும், ஒருவர்க்கொருவரை பரிச்சியம் செய்வித்தும் இன்னும் இவைகளைப் போன்ற பல்லோரையும் பாழுங்குழிக் கிழுத்துவிட்டாழ்த்தப் பன்னலம் கொழிக்கும் பாதிரிமார்களின் பாங்கை இப்பாருலகில் அறியாதார் உளரோ?

சகோதர சகோதரிகளே! கூலிக்கு மாரடிக்கும் போலி விவிலிய போதகர்களை நம்பாதேயுங்கள்! நம்பாதேயுங்கள்!! நம்பாதேயுங்கள்!!! ஓ இப்பூமண்டலத்தில் வாழும் சிங்கங்காள்! உங்களைப் போலி ஆட்டுக்குட்டிகளெனத் தாழ்த்தி விடாதேயுங்கள்!!

காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்கு தையோ வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே.

(என்றார் தாயுமானவர்)

ஆகலின் சைவாபிமானிகளே "எழுமின் விழிமின்" இவ்விஷயத்தைப்பற்றி இன்னும் எழுதப்புகின் இதில் இடம் பெறாதன்றோ. இன்னும் ஓரேவார்த்தை; இனியாகுதல் எங்கள்மதாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர் முதலான பெரிய மகான்களும், மங்கையர்க் கரசியாகிய பெண்கள் நாயகமும் எடுத்துக்கொண்ட முயற்சியும் அபார கருணாநிதியாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளும் நமது பரிசுத்த வேதமாகிய இந்து மதத்தை பல்லாயிரம் மைலுக்கப்பால் சென்று பரவுதல் செய்யும் பொருட்டாய் எடுத்துக்கொண்ட அரும்பெரும் கைங்கரியங்களும் நாம் அறிந்த விஷயங்கள் தாமே. ஆகவே இன்னும் நாம் கண்களை

மூடிக்கொண்டு சும்மா இருப்பது அழகாமோ? எங்கள் பிள்ளைகளை சைவ பாடசாலைகளுக் கனுப்பி மத ஆசாரங்களைப் படிக்கவும் அவைகளை அனுஷ்டானத்திற்கு இடையறாது கொண்டுவரவும் பாமரஜனங்களுக்கு எங்கள் இந்து சமயத்தின் பெருமையைப் புகட்டவும் முயற்சி யெடுப்பது எங்கள் இன்றியமையாத கடனன்றோ.

சுபம்

சு. செல்வநாயகம்
"தேவாலய தர்ஸனம்," கண்டி.

சுயபாஷைக் கல்வியின் மஹிமை

தாய்ப் பாஷையின் கௌரவம் தெரிந்துதான் காந்திமஹான் அவர்கள் 6¼ கோடி ஜனங்கள் பேசும் ஹிந்திபாஷையை நம்முடைய இந்தியாவுக்குப் பொதுப்பாஷையாய் (lingua franca) வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், எழுதுவதற்கு தேவநாகர எழுத்துகளும், உருது எழுத்துகளும் முறையே நாமும் மஹம்மதியர்களும் உபயோகப் படுத்தலாமென்றும் கூறி யிருக்கிறார். (ஹிந்திக்கு உரோமன் எழுத்துகள் உபயோகிக்கலாமென்று சிலர் சொன்னாலும் அது தேசாபி மானத்திற்கு விரோதமாகும்) நம் இந்தியாவில் சுமார் 15¼ கோடி ஜனங்கள் ஹிந்திக்கு சம்பந்தப்பட்ட பல பாஷைகளைப் பேசுகிறார்க ளென்றும், நம் தென் இந்திய திராவிட பாஷைகள் பேசுகிறவர்களுக்குத் தான் ஹிந்தி புதியபாஷை யென்றும் காந்தி அடிகள் சொல்லி இருக்கிறார். ஆனால் தென் இந்தியாவிலுள்ள மஹம்மதியர்களும் பின்னும் ஆஸியா, ஆப்ரிகா, ஐரோபா கண்டங்களில் உள்ள மஹம்மதியர்களும் ஹிந்தியைப் போன்ற பாஷையொன்று தான் பேசுகிறார்கள். ஆகையால் ஹிந்திக்குப் பல கண்டங்களில் (International) கௌரவமிருக்கிறது. மஹாத்மா காந்திக்குத் தாய்ப்பாஷை குஜராதி. அந்த பாஷைபேசும் ஒருகோடி ஜனங்களும் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்படுவார்கள். அம்மாதிரியே இரண்டு கோடி மகாராட்டிரர்களும் லோகமான்ய திலகருக்கு ஐக்கியப்பட்டார்கள். பங்காளிபேசும் ஐந்து கோடி ஜனங்களும், இரவீந்திரகவி இழுத்தமாதிரிதான் போவார்கள். இவர்களுக்கு இவ்வளவு சாய்கால் இருப்பது ஆச்சரியமல்ல. இங்கிலாந்தில் லாயட் ஜார்ஜும், கனடாவில் பார்டனும், ஆஸ்ட்ரேலியாவில் ஹ்யூஸ் என்பவரும், தென் ஆப்ரிகாவில் ஸ்மட்ஸ்துரையும், அமெரிக்காவில் வில்ஸன் போன்றவர்களும் எப்படிஜனங்களைத் தங்களுடைய தேசபாஷையாகிய இங்கிலீஷில் பேசி திருப்பிக் கொள்ளுகிறார்களோ அம்மாதிரிதான் இவ்விடமும் ஏற்படுகிறது. பிரான்சில் க்ளிமென்சு துரையும் ஜர்மனியில் ஹார்ட்லிங் என்பவரும் அதேமாதிரிதான் அவர்களுடைய பாஷைகளாகிய—ப்ரெஞ்ச்—ஜர்மனும் பேசி அவர்களுடைய ஜனங்களை வசப்படுத்திக்கொண் டிருந்தார்கள்.

இரண்டுகோடி ஜனருள்ள தமிழர்களுக்கு டாக்டர் வரதராஜுலுநாயுடுகாரும் ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் போன்றவர்களும் எவ்வளவு ஊக்கமும் தேசாபிமானமும் உண்டாக்கி இருக்கிறார்கள். அதே ஜனத்தொகையுள்ள தெலுங்கர்களையும் ஹரி ஸர்வோத்தமராவ் போன்றவர்கள் தேச ஊழிய உற்சாகத்தில் கிளப்பி யிருக்கிறார்கள். நம்முடைய இந்தியாவில் 1000 க்கு 5 பேர்தான் படிக்கத் தெரிந்தவர்கள். அதிலும் 1000 க்கு 5 பேர்களுக்குத் தான் இங்கிலீஷ்பாஷை தெரியும். ஆகையால் அந்தப் பாஷையில் பேசுவது செவிடன்காதில் சங்கூதினது போலும், குருடனுக்குக் கண்ணாடி காட்டியது போலும் ஆகும். நம் தேசபாஷையில் பேசினால் நிரக்ஷரகுக்ஷியானாலும், குருடனானாலும் தெரிந்து கொள்ளுவான். சுதேசபாஷைப் பத்திரிகைகளை யாராவது ஒருவன் வாசித்தால் கைநாட்டு ஆசாமிகளாக விருந்தாலும் அதைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!! நாம் இங்கிலீஷ் பாஷையில் பிரஸங்கம், நம்முடைய ஜனங்களுக்கோ அல்லது வெள்ளைக் காரர்களுக்கோ செய்யும்போது நமக்கு ஒரு மாதிரி தலைத் திருப்பம் வந்துவிடுகிறது. அதேமாதிரி தான் வெள்ளைக்காரர்கள் நம்மிடம் பேசும் போதும் அவர்களுக்கு ஒருமாதிரி அலட்சியம் ஏற்பட்டு விடுகிறது. அதாவது ஊமையோ, குருடனோ படிப்பது பரிதாபத்துடன் கூடிய ஆச்சரியம்போல் நாம் இங்கிலீஷ் பாஷை சுமாராய்ப் பேசுவது புதிதான சங்கதியாய் நமக்கும் அவர்களுக்கும் இருக்கிறது! ஆனால் நாம் நம் தாய்பாஷையில் பேச ஆரம்பித்தால் எல்லா ஜனங்களுக்கும் தெரியுமாகையால் நமக்கு ஒருமாதிரி கூச்சம் உண்டாகிறது. ஒழுங்கான வார்த்தைகளும் விசேஷமான விஷயங்களும் இல்லாவிட்டால் நம்முடைய தேசபாஷை பிரசங்கத்தைச் சனங்கள் சுலபமாய் அலக்ஷியம் செய்து விடுவார்களென்று நமக்குத் தெரியுமாகையால்தான் நமக்கு அருவருப்பு உண்டாகிறது. ஆனால் இங்கிலீஷ்பாஷையில் தேர்ச்சியடைவதால் இப்போ திருக்கும் சட்டசபைகளில் பேசி சர்க்கார் மெம்பர்களைச் சந்தோஷப் படுத்தலாம்! (ஆனால் சுய ஆட்சிவந்தால் சட்டசபைகள் கட்டாயம் தேசபாஷைகளிலேயே தான் நடத்தப்படும்) அல்லது இங்கிலாந்துக்குப்போய் அந்த வெள்ளைக்காரர்களுக்கு நம்முடை குறைகளை பிரஸங்கம் செய்யலாம்!! (அதுவும் இலேசில் போக உத்திரவு "சாஸ்திரி" ப்போன்றவர்களுக்குத் தவிர, மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை) நாம ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு பாஷைகள் பேசவும் படிக்கவும் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது நம் பாஷை முதலும் இரண்டாவது நமது தேச பொதுபாஷையான ஹிந்தியும் கற்றுக் கொள்ள வேண்டும். நமது தற்கால இராஜாங்க பாஷையும், உலகபொது பாஷையும், (International) ஆன இங்கிலீஷும் தெரிந்தாலும் நலம் தான். திராவிடபாஷைகளுக்கு இருப்பதுபோல் மற்றஹிந்தி முதலிய தேச பாஷைகளுக்கும் (ஏற்கனவே இல்லா விட்டால்) Typewriting அச்சும், Shorthand சுருக்கலிபியும் ஏற்படுத்த வேண்டும். தந்தி அடிக்கக்கூட

நமது பாஷைகளில் சின்னங்கள் கண்டு பிடிக்கவேண்டும். பிரக்ருதிசாஸ்திர (Science) புஸ்தகங்களும் பண்டித சிகாமணிகள் சேர்ந்து நமது பாஷைகளில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்க வேண்டும். சுதேசியக் கல்வியைப்பற்றி இப்போது விசேஷகிளர்ச்சி யிருப்பதால் அதைக்கைவிடாமல் முடிக்கவேண்டும். ஹரித்வாரத்தில் குருகுலவாஸ கலாசாலை எல்லாவிதத்திலும் சுதேசக் கல்வியைப் புகட்டுவதில் சிரேஷ்ட மானது. இரண்டாவது ஸ்ரீகாசியிலும் ஒன்று (Hindu University) ஏற்பட்டிருக்கிறது. இவை இரண்டும் ஹிந்திய பாஷையே தான் (Medium of instruction) உபயோகிக்கிறது. உருது பாஷைக்கு அதாவது மஹம்மதியர்களுக்கு அலிகர் நகரிலும் ஹைதிரா பாத் சம்ஸ்தானத்திலும் கலாசாலைகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். வங்காள பாஷைக்கு "சாந்திநிகேதனமும்" தெலுங்கருக்கு "ஆந்திரஜாதிய கலாசாலை" என்பதும் கன்னடத்திற்கு மைசூர் ஸமஸ்தானத்தில் கலாசாலைகளும் ஏற்பட்டுள்ளன. குஜராதி பாஷைக்கு பூனாநகரத்திலும், மராதிக்கு பரோடா சமஸ்தானத்திலும், மலையாளத்திற்கு திருவாங்கூரிலும் அம்மாதிரி கலாசாலைகள் வெகுசீக்கிரத்தில் தாபிக்கப்படும். ஆனால் மேல் சொல்லிய கலாசாலைகள் 30 கோடி ஜனங்களுக்கு எந்தமூலை? இப்போது படிக்கத் தெரிந்த 1½ கோடிஜனங்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாலும் ஆகும் 1½ கோடி ரூபாயும் சுதேசகல்விக்கு முதலாக வைத்துக்கொண்டு வருஷாவருஷம் அல்லது மாதமாதம் வசூல்செய்தும் விருத்தி செய்யலாம். சுதேசகல்வியில் ஸ்திரீகளுக்கு பிரத்தியேகமாய் அவர்களுக்கு தேவையான விஷயங்கள் புகட்ட தனிக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தவேண்டும். தொழில் கல்விச்சாலைகளும் வேண்டும். அதாவது அன்னவஸ்திரங்களுக்கு அன்னிய தேசங்களை எதிர் பாராமல், விவசாயம், நெசவுத் தொழில்களை முக்கியமாய் கற்பிக்கவேண்டும். பிரக்ருதிசாஸ்திர ஆராய்ச்சி சாலைகளும் (Research Laboratories) அவசியம் வேண்டும். வைத்திய சாஸ்திரமும் சுகாதார விருத்தியும் கற்பிக்கும் கலாசாலைகளும் தாபிக்க வேண்டும். கடைசியில், நமது இந்தியாவிலுள்ள ஒரு இலக்ஷக் கணக்குக்கு மேற்பட்ட, ஊமை, குருடர்கள் இவர்களுக்கும் பாடசாலைகள் (Blind and Dumb Schools) ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது நம்முடைய பெருங்கடமை. "சாக்குமுடுக்கா? செட்டியார் முடுக்கா?" என்னும் பழமொழிபோல் இப்போது பாடசாலைகளுக்குக் கட்டிடமும் தளவாடமும் பெரிதா யிருக்கிறதே யொழிய, மாணவர்களுடைய படிப்பாவது; சங்கியையாவது, அல்லது உபாத்தியாயர்கள் சம்பளமாவது அதிகமாக இல்லை. இதற்கு முக்கியகாரணம் பரதேசநாகரிகத்தைப் புகட்டியதுதான். சுதேசகல்விச் சாலைகள் இந்தியர்களே தலைமையாக இருந்து நடத்தினால் நம் தேச நாகரீகமும், மதமும், ஆசாரமும், நோக்கங்களும் மாறாமல் நேராகவரும். சீக்கிரத்திலும் கல்விபரவும். ஒருசங்கதி பாருங்கள். இங்கிலாந்தில் "Daily Mail" என்னும் இங்கிலீஷ் தினசரிபத்திரிகைக்குச் சுமார் 20 இலக்ஷம்பேர்கள் சந்தாதாரர்களாம்! அதா

வது இங்கிலாந்தில் 4½ கோடி ஜனங்களுக்கு அவ்வளவுபேர் ஒரு பத்திரிகையைப் படித்தால் நம்முடைய இரண்டு கோடியுள்ள தமிழர்களில் "சுதேசமித்திரன்" போன்ற தினசரி தமிழ்ப் பத்திரிகைக்குச் சுமார் 9 இலக்ஷம்பேர்கள் படிக்கவேண்டும். அந்தோ, பரிதாபம்; 9 ஆயிரம்கூட இருக்காது என்று நம்புகிறேன் (இல்லையென்றே விசனிக்கிறோம்) மாதாந்திர பத்திரிகையாய் இருந்தாலும் ஆனந்த போதினிக்குச் சுமார் 20, 000 சந்தாதாரர்கள் இருப்பது சந்தோஷிக்கத்தக்கதே. மகாராட்டிர பாஷையிலுள்ள "கேஸரீ" பத்திரிகைக்குச் சுமார் 20, 000 சந்தாதார்கள் இருக்கலாமென்று சொல்லுகிறார்கள். இங்கிலீஷ் பத்திரிகை "Young Inda" இதற்கு முந்தி 40, 000 பேர்கள் வரவழைத்துக்கொண் டிருந்தார்களாம். "ஹிந்து" என்னும் தினசரி இங்கிலீஷ் பத்திரிகைக்கு 10 ஆயிரத்துக்கு உள்ளாகவே யிருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

இந்தப்பத்திரிகைகள் விஷயம் ஏன்சொல்ல வந்தேனென்றால் ஜனங்களுக்கு எவ்வளவுக் கெவ்வளவு எழுதப்படிக்கத் தெரியுமோ அவ்வளவுக் கவ்வளவு, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி, ஜப்பான் தேசங்களில் போல் பத்திரிகைகள் ஏராளமாகப் படிக்கப்படும், தேசவிஷயங்களும், இக்காலத்து சங்கதிகளும் கேவலம் சாமான்ய ஜனங்களுக்குக்கூடத் தாமிருக்கும் இடத்திலேயே வெகுசொல்ப செலவிலேயே, பிரதிதினமும், அல்லது வாரம், மாதத்திலோ, பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம், ஆண்பெண்களுக்குக் கட்டாய இலவசபடிப்பும், எல்லாத் தேசபாஷைகளிலும் நயமான பத்திரிக்கைகள் விருத்தி செய்வதும் இந்த இரண்டு காரியங்களினால் நமதுதேசம் அதிக சீக்கிரத்தில் சுய ஆட்சியும் பரதேசங்களில் மரியாதையும் அடையும். கடவுள் கிருபை செய்வாராக.

ய. துரைசாமி ஐயர்,
வாலாஜா.

சொற் பொருள் விளக்கம்.

(113-ம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிக்கூடம்.

பள்ளிக்கூடம், பாடசாலை, வித்தியாசாலை என்பவை ஒன்றே. கல்லூரி, கழகம், கலாசாலை, யென்பவை உயர்ந்தகல்வியைப் புகட்டுதற் குரிய இடமாம். பள்ளி—பள் என்பது இசை, இசையோடு கற்பிக்கும் இடமென்பது பொருள், பாடசாலை யென்பதற்கு அப்பொருளுமாம். சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டு மென்னும் விருப்ப முண்டாகும்படி இசையோடு கற்பிக்கவேண்டு மாதலால் அந்த இடத்துக்குப் பள்ளிக்கூடமென்று பெயர் வைத்தனர்.

187442

இசையானது எல்லாவுயிர்களையும் வசப்படுத்தும் தன்மையுடையது. அழுகின்ற குழந்தைகளையும் மகிழும்படி செய்யும். துன்பப்படுகின்ற நோயாளிகளையும் இன்புறச் செய்யும். அலைகின்ற மனத்தினையும் [illegible] ஒருக்கிப் பேரின்பத்தையும் தரவல்லது. அதன் பெருமைக்கு அளவில்லை.

கல்லூரி கழகமென்பவை இமய முதலிய மலைகளில் தத்துவநூல்களைக் கற்பிக்கும் பொருட்டு ஏற்படுத்திய கலாசாலைகளாகும். கல்+உரி= கல்லூரியாயிற்று. கல்=மலை. உரி=முளை. மலையில் வளர்க்கப்பட்டதென்பது பொருள். கல்லகம், களகம், கழகமாயிற்று. கல்லகம்=மலை. கற்பவர்களுக்குக் காற்றும், வெளிச்சமும், தூய்மையும் ஆவசியகமாதலால் உயர்ந்த மலைகளில் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன.

187442

குரு.

குரு, ஆசான், ஆசிரியன், உபாத்தியாயன், இறைவன், போதகன் என்பவை ஒருபொருட்சொற்கள்.

உபாத்தியாயர், வாத்தியார், வாத்தி எனவரும். குரு என்னுஞ் சொல்லுக்கு அறிவின்மையை நீக்குவோனென்பது பொருள். குரு என்பது முளையாதலால் மாணாக்கர் மனத்தில் முளைக்கச் செய்வோனெனலும் பொருந்தும்.

நன்றாக, குருவாழ்க, குருவே துணை என்னும் வழக்கால் குருவின் பெருமை விளங்குகின்றது. நன்றாக = மங்களமுண்டாக. ஆசானென்பதற்கு மாணாக்கரிடத்தில் அன்புள்ளவனென்பது பொருள். ஆதனென்பது ஆசானாயிற்று. ஆதன்=அன்பன். ஆசிரியன்=நூல்களை விரித்துக் கற்பிப்பவன். ஆசாரியன் என்பது ஆசிரியனாயிற்றெனலும் பொருந்தும். நூலாசிரியன், உரையாசிரியன், போதகாசிரியன் என ஆசிரியர் முத்திறப்படுவர்.

உபாத்தியயனனென்பது உபாத்தியாயனென ஆயிற்று. உபாத்தியயனன்= உதவியாக உடனிருந்து வைதிக நூல்களை ஓதுவிப்பவன். உப+அத்தியயனன்=உபாத்தியயனன்.

இறைவன் = உயர்ந்த ஆசனத்தி லிருந்து கற்பிப்பவன். இறை+வ்+அன். இறை = உயர்ச்சி.

போதகன்=அறிவைக் கொடுப்பவன். போதம் = அறிவு.

மாணவன்.

மாணவனெனினும் மாணாக்கனெனினும் வித்தியார்த்தியெனினும் பொருந்தும். மாணவனெனின் இசையோடு கற்பவனென்பது பொருள். மண் = இசை. அதாவது இராகம். மாணாக்கனென்பதற்கும் அப்பொருளே. கற்கின்றபடியால் பெருமை பொருந்திய நாக்கையுடையோனெனலும் பொருந்தும், மாண்+நாக்கன். மாண்=பெருமை. வித்தியார்த்தி=

வித்தையை நாடுவோன். சிஷ்யனென்பதும் மாணாக்கனைக் குறிக்கும். மாணவன் மனனஞ்செய்பவன் என்னும் பொருளிலும் வரும்.

சட்டாம் பிள்ளை.

சட்டாம்பிள்ளை = உபாத்தியாயருக்கு உதவியாக இருப்பவன். மாணாக்கர்களை ஒழுங்காக நடத்துவோனென்பது பொருள். சட்டமென்பது கலைஞானங்களையும் அவற்றால் ஏற்பட்ட ஒழுங்கையும் குறிக்கும். சாடு என்பது சட்டமாயிற்று. சாடு = அறிவு, சாடுவர் = அறிஞர்.

சட்டமெனின் ஒழுங்குபடுத்துவது, திருத்துவது எனப்பொருள் கூறல் வேண்டும். மேல்வரிச் சட்டமென்பதனால் அறிந்து கொள்ளலாம். சட்டக்கல்வி என்றால் தருக்கம், சோதிடம், வைத்தியம், இராஜ தந்திரம் முதலிய எல்லாக் கலைகளையும் ஆழ்ந்து நுணுகி அறிந்து பேசுவதெனப் பொருள் கூறல்வேண்டும்.

குரு விசுவாசம்.

குருவினிடத்தில் மாணாக்கர் வைக்கும் விசுவாசமெனப் பொருள் கொள்ள வேண்டும். குருவிசுவாசம் மாணாக்கர்களுக்கு ஆவசியகமானது. ஏகலைவனென்போன் குரு விசுவாசத்தினால்தான் தனுர்வித்தையில் தேர்ச்சி பெற்றான். குரு நிந்தை பஞ்சமாபாதகங்களுள் ஒன்று.

தண்டனை.

மாணாக்காது குற்றத்தி னளவையும், அவர் சரீரத்தின் அளவையும், வயதினளவையும், அறிவினளவையும், பெருமையினளவையும் அறிந்து தண்டிப்பதென்பது பொருள். "அடிபடாதமாடு படியாது" "அடித்துவளர்க்காத பிள்ளையும்" "முறுக்கிவளர்க்காத மீசையும் செவ்வையாகா" "ஆணை அடித்து வளர்க்க வேண்டும் பெண்ணைப் போற்றிவளர்க்க வேண்டும்" "பிள்ளைக்கு வாத்தியாரும் பெண்ணுக்கு மாமியாரும் வேண்டும்" "அடிக்கும் ஒருகை அணைக்கு மொருகை" "பரிந்தவிடம் பாழ்" என்னும் பழமொழிகளால் தண்டனை ஆவசியக மாகின்றது. தண்டனை யென்பது கையில் பிரம்பாலடிப்பது எனப்பொருள் பட்டாலும் நலலறிவுபுகட்டுதலும், தள்ளிவைத்தலும், நிற்கச் செய்தல் முதலியனவும் ஓர்வகை தண்டனையேயாம். இவ்வகைப்பட்ட தண்டனையைக் கோதண்ட மென்பர்.

குதண்டம் என்பது கோதண்ட மாயிற்று.

குதண்டம் = சிறுதண்டனை. கு = சிறுமை. (தொடரும்)

மாகறல். பொன்னுசாமி முதலியார்,

[illegible]

———

இல்லறம்—கன்மம்.

(141-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி இந்தக் கன்மவிஷயத்தில் அநேக ஆக்ஷேபனைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் முறையாக எடுத்துக்காட்டி அவற்றுக்கு முன்னோர் கூறிய சமாதானங்களைக் கூறவதென்றால் இச்சிறு நூல் மிக விரியும் ஆதலால் அவற்றை யெல்லாம் விலக்கிப் பிரதான இரண்டு ஒன்றுக்கு மாத்திரம் சமாதானங் கூறிவிட்டு மேலே செல்வாம். ஏனெனில் அவற்றுக்கெல்லாம் வசிஷ்டர் பராசரர் வியாசர் முதலான ரிஷிகளும், சுகர், கௌடபாதர், ஸ்ரீசங்கராசாரியர், இராமாநுஜாசாரியார், வேதாந்ததேசிகர், விஜயிந்திரர், ஆனந்ததீர்த்தர், வல்லபர், இரேவணர், சோமநாதர், முதலிய பல மதாசாரியர்களும் செவ்வனே சமாதானங் கூறியிருக்கின்றார்கள். பிறகு அகோர சிவாசாரியார், திரிலோசனசிவாசாரியார் முதலியவர்களும் விடையளித்து இருக்கின்றார்கள். இவற்றை அவ்வவர் எழுதி வைத்திருக்கும் பத்ததிகளிற் காணலாம். இவ்வளவு பேராசாரியர்களால் புகழப்பட்ட கன்மம் பிறாது ஆக்ஷேபனைகளால் பாதிக்கப்படமாட்டா தென்பதே சித்தாந்தம்.

இனி யெடுத்துக் காட்டவேண்டியதாவது, பாபத்தால் புண்ணியம் ஒழியும் புண்ணியத்தால் பாபம் ஒழியும் என்கிறார்களே, அப்படியானால் ஒருவன் புண்ணியத்தைச் செய்து ஒரு மஹா பாதகத்தைச் செய்துவிட்டால் அப்புண்ணியம் ஒழிந்து போகின்றது. மஹா பாபங்களைச் செய்த ஒருவன் ஒரு பெரும் புண்ணிய கன்மத்தைச் செய்தால் அப்பாப கன்மமும் ஒழிகின்றது என்று காணப்படுகிறது. அங்ஙனமாயின் புண்ணிய கன்மத்தைச் செய்வதனாற் பயன் யாது? உண்டேல் அது அதிக சூட்சுமமாக இருக்கவேண்டும். அதை விளக்கிக்காட்டவேண்டு மென்பதாம்.

இனி புண்ணியத்தாற் பாபகன்மம் ஒழியுமென்றாவது பாபத்தாற் புண்ணியம் ஒழியுமென்றாவது கூறவில்லை. சில பாபகன்மங்களை பிராயச்சித்தத்தால் ஒழித்துக்கொள்ளலாமென்றும் சில பாபகன்மங்கள் புண்ணியத்தை யொழிக்குமென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. பாபபுண்ணிய கன்மங்களின் பயன் ஒழியுமென்பதேயன்றி யக்கன்மங்களெல்லா மொழியுமென்பதில்லை. இதற்கு மாறாகப் புண்ணியபலத்தால் சொர்க்கலோகத்தை யடைந்த ஒருவன் அவன் முன்செய்துள்ள பாப பலனை யனுபவிப்பதற்குப் பூமியிற் பிறப்பான் என்றும், பாபகன்ம பலனை யனுபவிக்க நரகத்தை யடைந்த ஒருவன் மீண்டும் பூமியிற் பிறந்து அவன் செய்த புண்ணிய பலனை யனுபவிக்கிறானென்றும் புராணங்கள் கூறுகின்றன. ஸ்மிருதிகளும் கூறுகின்றன. பாபபுண்ணிய கன்மங்களிரண்டும் இருப்புத்தளையையும் பொற்றளையையும் நிகர்க்குமாதலால் இருவகைக் கன்மங்களும் பந்தமே

யாமென்றும் எல்லா நூல்களும் கூறுகின்றன. ஆதலால் ஏதோ சில கன்மங்கள் ஒன்றை யொன்று ஒழிக்குமென்பதே யன்றி எல்லாக் கன்மங்களும் ஒன்றால் ஒன்று அழியு மென்பது நூல்களின் கருத்தல்ல. அவை யவை யென்பதை ஸ்மிருதிகளில் ரிஷிகள் விளக்கி யிருக்கின்றார்கள். ஆண்டு கண்டுணர்ந்து கொள்ளலாம். சிவபூஜாதி கன்மங்களினாலுண்டாகும் பலன்களை யெவ்வகைப் பாவகர்மமும் ஒழிக்கமாட்டாவாம். ஏனென்றால், பஞ்சேந்திரியங்களையும் அடக்கி மனதை ஒருவழிப்படுத்தி ஆன்மா பரமான்மாவோடு சம்பந்தித்து நிற்க எல்லாவற்றையும் மறந்து பக்தியோக நிலையில் நின்று செய்யப்படும் சிவ பூஜாதி மஹா புண்ணியங்களை யெந்தப் பாபமும் ஒழிக்கும் சக்திபெறமாட்டாது. இப்படியே சில மஹா பாபங்களை எவ்விதப் புண்ணியமும் ஒழிக்கும் ஆற்றல்பெறாது. தேசகால வேற்றுமையால் வேறுபட்டு வாக்கு மனம் காயம் முதலியவற்றின் தொழில்களாக நின்ற அவை யொன்றை யொன்று ஒழிக்காது. இனி யோசித்தால் பாபத்தால் புண்ணியம் ஒழியப் புண்ணியத்தால் பாபமொழியாது. எவ்விடத்தும் பாபப்பலன் பெரிது. நம்மை யறியாமல் சில பாபங்கள் நேரிட்டால் அதைப் பிராயச் சித்தங்களால் ஒழிக்கலாம். சுசியாயுள்ள ஒருவன் துர்நாற்றத்தைச் சுவாசத்தால் உட்கொள்ள நேர்ந்தால், உடனே நற்காற்று வீசுமிடம் நாடிச் சென்று அந்தத் துர்க்காற்றின் சம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதுபோல அற்பபாபங்களை யுடனே பிராயச்சித்தத்தால் ஒழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பாபமலங்கள் சரீரத்தில் தங்கிக் காலாந்தரத்தில் சரீரத்தைக் கெடுக்கும். இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன ஔஷதம் உண்ண வேண்டுமென்று வியாதியின் கூறுபாடுணர்ந்த வைத்தியன் கூறுவான். அவன் வாக்கே அதற்குப் பிரமாணம். அதுபோல இன்ன பாவத்துக்கு இது பிராயச்சித்தமென்று ரிஷிகள் எழுதிவைத்திருக்கிறார்கள். அதற்கு அதுவே பிரமாணமாம். இதனால் கன்மங்கள் பலன் கொடாமற் போவதில்லை. இருமையிலும் பலனளிக்கும் கன்மங்கள் பலனைக் கொடுத்தே தீரும்.

இனி கன்மத்தின் பயன் அதிக சூக்குமமா யிருக்குமாதலால் அதனை விளக்கவேண்டு மென்பதைக் கவனிப்பாம். இவ்விஷயத்தில் ஒரே ஒரு விஷயத்தை யெடுத்துக் காட்டுவோம். இது முன்னர் கூறப்பட்டதாயினும் சமயம் நேர்ந்தமையால் ஈண்டும் சிறிது கூறுவாம். உதயத்துக்கு இரண்டு நாழிகைக்கு முன்னுள்ளகாலம் சந்தியாகாலமென்னப்படும். அந்தச் சந்தியாகாலத்துக்கு முன் இரண்டு நாழிகை ஸ்நானகாலமாம். கிரகஸ்தர்கள் அக்காலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். சந்நியாசிகளும் பெண்களும் உதயத்துக்குப்பின் ஸ்நானம் செய்யவேண்டும். நீராடினால் உடம்பிலுள்ள அழுக்கு ஒழியுமென்பது யாவரும் உணர்ந்த விஷயமாம். அது எந்த இடத்தில் எக்காலத்தில் நீராடினும் அடையக்கூடும். ஆனால் இதே காலத்

தில் ஸ்நானம் செய்வதனால் வேறு பயன் யாது என்பது கூறுவாம். சூரியனுதித்தகாலம் முதல் சூரியகிரணத்தால் நீரெல்லாம் உஷ்ணம் அடைந்து ஆவிகிளம்பி மேனோக்கியே நிற்கும். சூரியன் மறையும் வரையில் உஷ்ணம் கொண்ட நீரெல்லாம் இரவு வரவரச் சிறிது சிறிதாக உஷ்ணம் குறையப் பெறும். எத்தனை காலம் உஷ்ணம் படிந்ததோ அதே கால அளவை உஷ்ணம் நீங்கவும் வேண்டும். ஆதலால் பகற்காலத்தில் குளிர்ச்சியுள்ள நீர் கிடைப்பதரிது. இரவில் உஷ்ணம் காணப்படுவதில்லையாயினும் உஷ்ணமெல்லா மொழிந்து தண்ணீர் தன் இயற்கை நிலைமையையடைய அக்காலம் வரைக்கும்பிடிக்கும். தண்ணீரின் இயற்கை நிலைமையாவது அமிர்தத் தன்மையாம். அவ்வமிர்தத்தன்மை நெடுநேரம் நிலைத்து நில்லாது, ஒரு நாழிகைக்கெல்லாம் மறுபடியும் உஷ்ணம் பரவ வாரம்பிக்கு மாதலா லென்க.

அதற்குமுன் எழுந்திருந்து கடவுள் தியானத்தால் மனதைச் சுத்தி செய்துகொண்டு நிர்மல சித்தமுடையவனாய் நிர்மலமான நீரில் ஸ்நானம் செய்வதனால் உள்ளங்கால் முதல் உச்சி வரையிற்படிந்த மலமொழிந்து சரீரம் நிர்மலப்படும். கண்குளிரும். பித்தம் சமப்படும். அன்ன சேஷங்கள் ஜீரணிக்கும். வாதம் கிளம்பும். சுறுசுறுப்பும் பலமுமுண்டாகும். குளிர்ச்சி மிகுதியால் சரீரசந்திகளில் கபம் உறைந்து அவை பலப்படும். முத்தோஷங்களும் சமப்படும். அதனாற் சரீராரோக்கியமுண்டாகும். முத்தோஷங்களும் ஏற்றத் தாழ்வாயிருப்பதே நோயென்றும், அவை சமப்பட்டு நிற்பதே ஆரோக்கியமென்றும் வைத்திய நூல்கள் கூறுகின்றன. சரீர அழுக்கு நீங்கி வேர்வை வெளிப்படுமாதலால் தேகம் மினுமினுப்படையும். இரத்தம் சுத்தியாம். இரவில் வெளிப்பட்ட மலங்கள் புலன்களில் தங்கியிருக்கும். அம்மலம் சூரிய கிரணம்பட்டால் உலர்ந்துபோம். உலர்வதற்கு முன் சுத்த ஜலத்திற் கழுவிவிட்டால் அவைகள் நிர்மலமாய் நல்ல வேலைகளைச்செய்ய உபயோகமாகும். காலையில் ஸ்நானம் தவறாமல் செய்பவர்க்குக் கண்ணொளி சீக்கிரம் மழுங்காமலிருப்பதும் பிரத்தியட்சமாகும். தேகபலமும் குறைவதில்லை. இரவில் தண்ணீரைச் சுத்தமான பாண்டத்தில் வைத்து கண்ணைக் கழுவினால் பலவகையான நேத்திர ரோகங்கள் தீருமென்பது வைத்தியநூல் விதியாம். பல்தேய்த்து முகம் கழுவுவதும் இதை யனுசரித்ததே யாம். பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு இவை யெல்லாம் அநாவசியமாம்.

இத்தகைய நோய்கள் சில ஔஷதங்களாலும் நீங்கக்கூடுமே யெனில் இயற்கையாகச் செய்யவேண்டிய ஸ்நானத்தினால் ஒழியக்கூடிய இதனைச் செய்யாமல் பிறகு ஔஷதம் தேடி யலைவது உசிதமாகுமா? ஔஷதத்தினால் நீங்குவதுமுண்டு, நீங்காததுமுண்டு. இந்த ஸ்நானத்தினால் ஒழிவது நிச்சயம். இக்கன்மத்தின் பயன் இது என்று வெளிப்பட்டது. இனி காலை

ஸ்நானத்தினால் புற அவயவங்கள் சுத்தியாவதுபோலவே நீரின் அமிர்த குணம் மயிர்க்கால் வழியாகப் பிரவேசித்து உள்ளுறுப்புகளையும் சுத்தியாக்கும். இதனால் நிர்மல சித்தமுண்டாகும். பாபத்தில் மனம் செல்லாது கடவுளைச் சிந்திக்கத்தக்க நிலைமையை யடையும். அதனால் ஞானமும் உண்டாகும். இவற்றால் அடையும் பயன் அளவற்றன. இது சூக்குமப்பயன். இதுகாரணம் பற்றியே ரிஷிகள் எல்லாரும் தீர்த்தயாத்திரை செய்தார்கள். தர்மபுத்திரர் பாபத்தினின்றும் விடுபடுவதற்காகவே அவரைத் தீர்த்தயாத்திரை செய்ய ஏவினான் மஹேந்திரனென்று பாரதம் கூறுகின்றது. ரிஷிகளெல்லாரும் பிராதஸ்நானம் தவறாமல் செய்து வந்ததினாலேயே இஷ்டார்த்த சித்திகளை யடைந்து சிறப்புற்றார்களென்று எல்லா நூல்களும் கூறுகின்றன.

(இன்னும் வரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

பகவத்கீதை வசனம்

(148-ம் பக்கத் தொடர்ச்சி)

அர்ச்சுனன்:—அந்தப் பிரம்மவித்தாகிய ஞானியும் மோக்ஷப் பிரயத்தனம் செய்யும்போது இந்திராதி தேவதைகள் பல இடையூறுகளைச் செய்வார்களன்றோ. அவற்றை நீக்கும் பொருட்டு அத்தேவதைகளுக்கு ஆராதனை முதலிய கருமங்களைச் செய்ய வேண்டாமோ ?

பகவான்:—ஏ அர்ச்சுன ! ஆன்மஞான மடையும் முன்னர்தான் அத்தேவதைகள் விக்கினம் செய்யக்கூடும். ஆன்மஞான மடைந்த பின்னர் மோக்ஷமடைவதில் அவர்கள் விக்கினம் செய்யக்கூடியவர்களாகார்கள்.

[மோக்ஷப் பிரயத்தனத்தில் ஏழுபடிகளுண்டு. அவைகளுக்கு ஞான சத்த பூமிகள் என்றுபெயர். அவை:—1. சுபேச்சை, 2. விசாரணை, 3. தநுமானசி, 4. சத்துவாபத்தி, 5. அசம்சத்தி, 6. பதார்த்தபாவனை, 7. துரியம் என்ற ஏழுபூமிகளாம்.

“புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சை விசாரணையிரண்டாம் பூமியாகும்
நலதநுமானசிமூன்றாம் பூதிசத்து வாபத்தி நாலாம் பூமி
சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தபா வனைப்பேரும் துரியப் பேரும்
மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்.”

இவற்றுள், (கைவல்லியம்)

1. சுபேச்சை—நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகலோக பரலோக போகங்களில் விராகம், சமாதி சட்சம்பதியாகிய இச்சாதன வாயிலாய் மோக்ஷமடைய வேண்டும், அதாவது ஞானத்தை யடையவேண்டும் என்ற திட இச்சையுண்டாதல் சுபேச்சை.

2. விசாரணை—குரு முகத்தில் சாத்திரங்களைச் சிரவணம் செய்வதும் அவற்றின் அர்த்தங்களை மனனம் செய்தலும் விசாரணையாம்.

3. தநுமானசி—முன் இரண்டு பூமிகளின் அப்பியாசத்தால் மனம் ஒருமைப்பட்டுச் சாதனையால் ஆன்மாவைச் சூக்குமமா யறியும் சவிகற்ப சமாதி நிலையடைந்து முன்னுள்ள மலினவாசனை யொழிதல் தநுமானசியாம்.

4. சத்துவாபத்தி—மூன்று பூமிகளின் அப்பியாசத்தால் புறவிடயங்களின் நாட்டமொழிந்த சத்துவமனத்தின் கண் ஆன்ம சாக்ஷாத்காரம் உதித்தல்—(அதாவது ஆன்மதரிசனம் பெறுதல்) சத்துவாபத்தியாம்.

அசம்சத்தி—மேல் கண்ட நான்கு பூமிகளின் அப்பியாச வலியால் பிரம்மான்ம ஐக்கிய நிலையடைந்து அஞ்ஞானமும் அதன் காரியங்களும் தோன்றா தொழிதல் அசம்சத்தி.

6. பதார்த்தபாவனை—திரிபுடி நீங்கி அத்துவிதமான ஆனந்தமுண்டாகும் நிர்விகற்ப சமாதி நிலையே பதார்த்த பாவனையாம்.

7. துரீயம்—அந்தப் பிரம்ம சாக்ஷாத்கார நிலையாகிய மோன நிஷ்டையில் இருந்தபடி நிலைத்திருத்தல் துரியமாம்.

இந்த ஏழுபூமிகளில் முதல்மூன்று பூமிகளிலு முன்ளோர் அப்பியாசிகளாகும், முத்தரல்லர். இந்த மூன்று பூமிகளிலும் பல பேதமாகிய உலகம் தோன்றிக்கொண்டே யிருக்கும். ஆதலின் இது சாக்கிரம் என்று கூறப்பட்டது. நான்காவது பூமியடைந்தவனே ஞானமடைந்தோன். இந்த நான்காவது பூமியில் உலகம் கனவுபோல் பொய்யாய்த் தோற்றும். ஆதலின் சத்துவாபத்தி சொப்பனாவஸ்தை யெனப்படும். 4, 5, 6, 7 இந்த நான்குபூமிகளும் ஜீவன் முத்தரின் நான்கு பேதங்கள் அதாவது படிகளாம்.

நான்காவது பூமியை யடைந்தவன் பிரம்மவித் என்றும், ஐந்தாவது பூமியை யடைந்தோன் பிரம்மவரன் என்றும், ஆறாவது பூமியையடைந்தோன் பிரம்மவரியா னென்றும், ஏழாம்பூமி யடைந்த ஜீவன் முத்தன் பிரம்மவரிட்ட னென்றும் கூறப்படுவார்கள்.

ஐந்தாவது பூமியில் அஞ்ஞானத்தின் காரியங்கள் தோன்றாவாதலின் ஐந்தாவது ஆறாவது ஏழாவது பூமிகளில் உலகத் தோற்றரவில்லை—ஐந்தாவது பூமியைச் சுழுத்தியென்றும் ஆறாவது பூமியைப் பெருஞ்சுழுத்தியென்றும், ஏழாவது பூமியைத் துரியமென்றும் கூறப்பட் டிருக்கிறது. ஐந்தாவது பூமியிலுள்ள பிரம்மவான் சமாதி நிலையினின்றும் தானே பிராரப்த வலியால் வெளிக் கிளம்புவான். ஆறாவது பூமியிலுள்ள பிரம்மவரியான் பிறர் தூண்டுதலால் பகிர்முகத்திற்கு வருவான்—ஏழாவது பூமியிலுள்ள வரிட்டன் தானாகவும் பகிர்முகப் படான், பிறர் தூண்டினாலும் பகிர்முகத்திற்கு வாரான். ஆறாவது ஏழாவது பூமிகளில் நிலைத்து நிற்பது பிராரப்த

வலியின் அளவைப் பொருந்தியதாகும். மிகக்குறைவான பிராரப்த போகமுடையோரே அவற்றில் நீடித்திருக்கக் கூடும்.

இவர்களில் முதல் மூன்று பூமியிலுள்ளவர்கள் கருமத்தைச் செய்ய வேண்டியவர்கள். நான்காவது பூமிக்கு வந்த பிரம்மவித்தே கர்மத்தைச் செய்யவேண்டிய அவசியமில்லையென்றால் அதற்கு மேற்பட்ட ஐந்து ஆறு ஏழுபூமிகளிலுள்ளவர்களைப்பற்றிக் கூறவேண்டியது அவசியமின்றாம்.]

பகவான் பின்னும் கூறுகிறார்:—" இக்காரணங்களால் ஏ அர்ச்சுனா! நீயும் கர்மபலத்தில் இச்சையற்றவனாய்ச் செய்யத் தக்கனவாகிய யுத்தாதிகருமங்களைச்செய். உனக்கு முன்னிருந்த க்ஷத்திரிய அரசர்களும் இவ்வாறே நிஷ்காமகர்மாநுஷ்டானத்தால் சித்த சுத்தியடைந்து அத்துவாரா ஞானநிஷ்டையை யடைந்தனரே யன்றிக் கர்மத்தைத் தியாகம் செய்துவிட்டு ஞானத்தை யடையவில்லை. அத்தகைய அரசர்கள் யாரெனின் சனகன், அஜாதசத்துரு, அசுவபதி, பாகீரதன் முதலிய மன்னர்களேயாகும். ஆதலின் உலக சங்கிரக நிமித்தம், அதாவது உலகில் தருமத்தை நிலைநிறுத்தி அதருமத்தை யொழிப்பதன் காரணமாக நீ நித்தியகருமங்களைச் செய்தே தீரவேண்டும்.

நான் அக்கருமங்களைச் செய்வதால் உலகோரும் எப்படிச் செய்வார்கள் என்று சங்கிப்பையாயின் கூறுகிறோம் கேட்பாயாக. அரசன் முதலிய மேலோர் எக்கருமத்தைச் செய்கிறார்களோ அதையே அவர்கள் ஆணைவழியொழுகும் கீழோரும் செய்வார்கள். மேலோர் பிரமாணமாகக் கொண்டதையே மற்றையரும் கொள்வார்கள். மற்றையர் சத்கருமங்களைச் செய்யும் பொருட்டு அரசர் முதலியமேலோர் அவற்றைச் செய்யவேண்டும்.

ஏ பார்த்த! அதற்கு நானே திருட்டாந்தமாக விருக்கிறேன். இத்திரிலோகங்களிலும் செய்யவேண்டிய காரியம் எனக்கு ஒன்றுமேயில்லை. நான் அடையவேண்டியவைகளாவது அடையத்தகாதவைகளாவது ஒன்றுமேயில்லை. இப்பூவுலகத்தோர் சத்கருமங்களைச் செய்து க்ஷேமமடையும் பொருட்டே கருமங்களைச் செய்துகொண்டிருக்கும் என்னைப்பார். நான் கருமங்களைச் செய்யா திருப்பனேல் நான் செய்யாத சத்கருமங்களை கர்மத்திற் கதிகாரிகளான சகலரும் செய்யாது விடுவார்கள். அதனால் வருணாசிரம தர்மங்கெட்டு யாவரும் அழிவார்கள்.

ஆகையால் நீ ஞானியாயினுங் கூட, அஞ்ஞானிபோல் போக இச்சையோடுங் கூடிக் கருமங்களைச் செய்யாமல் உலக நன்மையின் பொருட்டாக நிஷ்காம சிந்தை யுடையவனாய் உனது கருமங்களைச் செய்வாயாக " என்று கூறினார்.

ஞானியும் அஞ்ஞானியைப் போன்றே கர்மங்களைச் செய்யின் இருவர்க்கும் பேதமென்னையோ என்னும் அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் பின்வருமாறு அருள்கிறார்:—

ஏ பார்த்த! அஞ்ஞானி, நான் இன்ன கருமத்தைச் செய்கிறேன் இன்ன போகத்தைப் புசிக்கிறேன் என்ற உணர்ச்சியோடு கருமங்களால் அடையும் பலனில் இச்சைவைத்தவனாய்க் கருமங்களைச்செய்கிறான். உலக சங்கிரகத்தி னிமித்தம் கருமங்களைச் செய்யும் ஞானியோ இந்திரியங்கள் மனம் முதலியவற்றிற்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்று தன்னைவேறு பிரித்து ஆன்மாவே தானென்றறிந்தவனாதலின், தான் அகர்த்தா அபோக்தா (ஒரு கருமத்தையும் தனக்காக வென்று செய்பவனல்ல, ஒரு போகத்தையும் புசிப்பவனல்ல) என்றுணர்ந்து சாட்சிமாத்திரமாக விருந்து எவ்விதப்பயனிலும் ஆசையில்லாதவனாய்க் கருமங்களைச் செய்கிறான்.

இப்படிச் செய்யும் இவன் இச்சையோடு கருமங்களைச் செய்துகொண்டிருக்கும் அஞ்ஞானிக்கு " நீயகர்த்தா—கர்மங்களைச் செய்யவேண்டியவனல்ல" என்ற உபதேசத்தைச் செய்யாதொழிக.

[ஏனெனில், ஆசையொழிந்து அந்தக்கரண சுத்தத்தை யடைந்த அதிகாரியே ஆன்மஞான உபதேசம் பெறற்கு உரியவன்—இச்சையோடு கூடிய அசுத்த அந்தக்கரண முடையவன் நிஷ்காம கர்மம்செய்து சித்தசுத்தி யடைந்து அத்துவாரா ஞானமடைய வேண்டியவன். அத்தகைய கர்ம அதிகாரிக்கு நீ அகர்த்தா, கர்மத்தைச் செய்ய வேண்டியவனல்ல, என்று உபதேசித்தால் அவன் சத்கருமங்களில் சிரத்தை யற்றவனாய்க் கருமங்களை யடியோடு விட்டு அவற்றா லடையத்தக்க சுவர்க்காதி போகங்களை யிழப்பன்—சித்தசுத்தி யில்லாததால் அவனுக்கு ஞானமும் கிட்டாது. இதனால் அவன் இரண்டையு மிழந்து அழியும் வண்ணம் செய்ததாய் முடியும் என்பதாம்.

பட்டினத்தடிகள், சமயாசாரியர்கள் முதலிய முற்றத்துறந்த முழு ஞானிகளுக்குச் சொரூபவணக்கம் அவசியமே யில்லை. அப்படி யிருந்தும் நம்போன்றவர்களுய்யும்பொருட்டே அவர்கள் திவ்யஸ்தலதரிசனாதிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். சிலர் யாரேனும் கோயிலுக்குப் போவதைக் கண்டால் " கோயிலில், அங்கேயென்ன இருக்கிறது? எல்லாம் நமக்குள்ளே யிருக்கிறது " என்று கூறுகிறார்கள். இத்தகையோர் வெளிக்குத் தாங்கள் ஞானிகள் என்று நடிக்கும் கள்ளத்துரோகிகளே யாவர். உண்மையான ஞானியவ்வாறு கூறவேமாட்டான். ஏனெனில் தனக்குள் பரம்பொருளைக் காண்பது எத்தகைய அரியகாரிய மென்றும், அதற்கு எல்லாரும் அதிகாரிகளாகார்கள் என்றும், சொரூபாராதனை முதலிய கருமங்களை நாம் அனுவசியமென்று கூறினால் ஞானத்திற்கு அதிகாரிகளல்லாத பிறர் அநியாயமாய் சரியை கிரியையாதியடிகளையும் விட்டு அழிந்து போவார்கள் என்றும் அவன் நன்கறிவான். உண்மைஞானி மற்றையர் நன்மையின் பொருட்டுத் தன் ஆசிரமத்திற்குரிய கிரியைகளைச் செய்தே தீருவான்.]

பகவான் பின்னும் அருளிச் செய்கின்றார்:—

ஏ! அர்ச்சுன! எவன் அசூயையற்றவனாய்ச் சிரத்தாபத்தியோடு என் அபிப்பிராயமாகிய இக்கருமத்தை நியமப்படி செய்கின்றானோ அவன் புண்ணியம் பாபம் ஆகிய இரண்டு கருமங்களினின்றும் விடுபட்டவனாவான்.

[ஞானியின் புண்ணிய கர்ம பலன் அவனைப்போற்றி வழிபடுவோர்க்கும் பாபகர்ம பலன் அவனை நிந்தித்து இகழ்வோர்க்கும் சேரும்.

"பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கன்மம்
மறுமையிற் றொடர்ந் திடாமல் மாண்டுபோம் வகையே தென்னால்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
அறிவுளோ ரதிர்ந்து பூசித் தறமெலாங் கைக்கொள் வாரே"

கைவல்யம்.

எவன் என்னிடத்து அசூயையினால் நான் கூறிய இதில் தொடங்கற்பித்து இதை யங்கீகரிக்காது அலட்சியம் செய்கிறானோ அவன் யாவரும் நிந்திக்கத்தக்க துஷ்ட குணத்தை யுடையவனாவன். அத்தகையோன் சர்வ புருஷார்த்தங்களினின்றும் பிரஷ்டனாகி சர்வ ஞானங்களையும் இழந்தவனாவான் என்றறிதி.

அர்ச்சுனன் "ஈசுரனாகிய தங்கள் வாக்கை யலட்சியம் செய்வதில் ஜனங்களுக்குப் பீதிஇல்லாமல் போவதேன்!" என்று வினவிய சங்கைக்குப் பகவான் அருளிச் செய்கிறார்:—

அர்ச்சுனா! அவரவர்கள் பூர்வஜன்மங்களிற் செய்த தர்மம் அதர்மம், ஞானம், இச்சை முதலியவற்றின் சமஸ்காரம் இச்சன்மத்திலும் தொடர்ந்து வருவதால் அப்பிரகிருதியின் வயப்பட்டே யாவரும் நடக்கிறார்கள். விசேஷ பாபகர்மத்தின் வயப்பட்டுள்ளோர் துர்வாசனையின் பலத்தால் பாபத்துக்காவது நரகத்துக்காவது அஞ்சாமல் மேலும் மேலும் பாபகர்மங்களிலேயே பிரவர்த்திக்கிறார்கள். அவர்கள் என் ஆக்கினையை யலட்சியம் செய்ய அஞ்சமாட்டார்கள்.

பஞ்சேந்திரியங்களும் தொடர்ந்து செல்லும் விஷயங்களில்,பிராணிகள், ஞானமார்க்கத்தை யடையாவண்ணம் கெடுக்கத்தக்க விரோதிகள் உள. அவை இராகத்துவேஷங்களாகும் (இச்சையும் வெறுப்பும்). பிராணிகள் இவற்றின் வயப்படலாகாது. இவை பிராணிகளின் சத்துருவாதலால் ஏ! அர்ச்சுனா! நீ இவற்றை யிகழ்வாயாக.

[சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிங்குவை, ஆக்ராணம் இவை ஐந்தும் ஞானேந்திரியங்கள். வாக்கு, பாணி, பாதம், உபஸ்தம், பாயு, இவை ஐந்தும் கருமேந்திரியங்களாம். ஞானேந்திரியங்களுக்கு சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பவையும், கர்மேந்திரியங்களுக்கு வசனம், தானம், கமனம், ஆனந்தம், மல விசர்ச்சனம் என்பவையும் விஷயங்களாம். சிலனுக்கு எந்த விஷயங்கள் எச்சமயத்தில் அனுகூலமாய்த் தோன்றுகின்றனவோ அந்த விஷயங்களில் அச்சமயத்தில் இராகமும், எந்த விஷயங்கள் எச்சமயத்தில் பிரதிகூலமாகத் தோன்றுகின்றனவோ அவ்விஷயங்களில் அச்சமயத்தில் துவேஷமும் உண்டாகின்றன. ஒரே விஷயத்தில் சமயத்திற்குத்தக்கபடி இந்த இராகத்துவேஷாதிகள் மாறிமாறித் தோன்றுவது உணரத்தக்கது. இதனால் ஆனந்தமென்பது விஷயங்களில் இல்லையென்று நன்கு விளங்கும்.] (தொடரும்)

சீடன்.

அப்பர் சுவாமிகள் சரித்திரத்தில் ஓர் ஆராய்ச்சி.

எனது நண்பர் ஸ்ரீமான் K. S. சீனிவாசப் பிள்ளை அவர்கள் எழுதிய தமிழ் வரலாறு பிற்பாகம் புத்தகத்தின் 54-பக்கமுதல் 62-பக்கம்வரை அப்பமூர்த்திகள் சரித்திர ஆராய்ச்சி எழுதப்பட்டிருக்கின்றது. அச்சரித்திரத்தின் முதல் பாதிபாகத்தை நிகழும் ஐப்பசி மாதத்திய ஆனந்தபோதினி சஞ்சிகையின் 132-ம் பக்கம் முதல் 137-ம் பக்கம்வரை சுதந்தரன் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. சைவசமயாசாரிய சுவாமிகள் நால்வரும் பூலோகத்திலிருந்த வயதின் காலஅளவைக் குறிப்பிடும் பண்டைய செய்யுளில் "அப்பருக்கு எண்பத் தொன்று" எனக் கூறியிருப்பது சைவசமயிகள் பல்லோரும் அறிந்த விஷயமே. இந்த 81-வயதுக்குள் இன்னின்ன வயதின் கால அளவில், இன்னின்ன நிகழ்ச்சிகளை அப்பமூர்த்திகள் அடைந்திருந்தனர் என அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இவ் விஷயம் ஆராய்ச்சிக் குரியது. அப்பமூர்த்திகள் சைவசமயத்தை விட்டு ஆருகமதத்தில் பிரவேசித்தபோது அவர்களுக்கு 25-வயதாம். ஜைன மதத்தில் 15-ஆண்டுக ளிருந்தனராம். பிறகு சைவமதத்திற் புகுந்தபோது 40-வயதாம். இவ்வாறு யூகித்துக்கொண்டு, பிறகு 40 வயதுக்குமேல் 30 வருடகாலம் தொடர்ச்சியாக அதாவது 70 வயதுவரை அப்பமூர்த்திகள் திருவதிகையிலேயே தொண்டு செய்துகொண்டிருந்ததாயும், சம்பந்தமூர்த்திகளோடு முதற்றடவையாக கண்புற்றபோது அப்பமூர்த்திகளுக்கு எழுபதாண்டுகளுக்கு மேலிருக்க வேண்டுமென்றும், இந்த வயோதிக காலதேக நடுக்கத்தைத்தான் "திருமேனிதன்னில் அசைவும்?' எனப் பெரிய புராணம் திருநாவுக்கரசு புராணச் செய்யுட்களில் ஒன்றில் கூறிற்றென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. அப்பமூர்த்திகள் தொடர்ச்சியாகத் திருவதிகையில் 30 ஆண்டுகள் வசித்திருந்தனர் என்பதற்குப் பெரிய புராணத்தில் ஆதாரம் காணப்படவில்லை. சைவசமயத்தில் அப்பமூர்த்திகள் புகுந்தபின்னர் திருவதிகையில் உழவாரப் பணிவிடை முதலிய செய்துகொண்டிருந்த நாளில் ஜைநமதத்திலிருந்த பல்லவ அரசன் அப்பமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றுச் சைவனாகித் திருவதிகையில் திருப்பணி செய்தானென்றும் அக்காலத்

தில் அப்பமூர்த்திகள் தலயாத்திரை செய்யப் புகுந்தனர் என்றும் பெரிய புராணங் கூறும்—அது விஷயமான அடியிற்கண்ட பெரியபுராணச் செய்யுளைக் கவனிக்கவேண்டும்.

"இன்னுளிற் றிருப்பணிகள் செய்கின்ற வின்றமிழ்க்கு
மன்னனை வாகீசத் திருமுனியு மதிச்சடைமேற்
பன்னக மணிந்தவர்தம் பதிபலவுஞ் சென்றிறைஞ்சிச்
சொன்னமத் தமிழ்புனைந்து தொண்டு செய்வான் றொடர்ந்தெழுவார்"

[அப்பர்மூர்த்திகள் புராணம்—147 - செய்யுள்]

இச்செய்யுள் நான்காமடியின் ஈற்றில் 'தொடர்ந்து எழுவார்', என அருளப்பட்டிருப்பதினுல்—30—ஆண்டுகளாகிய நீடித்த காலம் திருவதிகையிலேயே அப்பமூர்த்திகள் வசித்திருந்தனர் எனக்கொள்ள இடமில்லை. பல்லவ அரசன் திருப்பணி செய்துகொண்டிருந்த காலத்திலேயே, அப்பமூர்த்திகள் தலயாத்திரைக்கு எழுந்தருளினதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் சிவபிரான் திருவருளைப் பெற்ற உடன்காலி லேயே மற்ற தலங்களையும் தரிசித்துத் தேவாரப் பாக்கள் பாடித் தொண்டு செய்ய ஆரம்பித்தார்கள எனக்கொள்வதே சிறப்புடையதா யிருக்கிறது. "திருமேனி தன்னில் அசைவும்" என்னுஞ் சொற்றொடருக்கு 70-ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயது முதிர்ச்சியால் உண்டான தேகத்தின் நடுக்கம் எனப் பொருள் கொள்ளும் பொருட்டே வயதுக்கிரமங்களை ஆதிமுதற் கற்பித்துக்கொண்டு வந்து, 40-ம் வயதுக்குமேல், 30-ஆண்டுகள் திருவதிகையில் அப்பமூர்த்திகள் வசித்திருந்தார்களெனக் கற்பனையாகக் கூறியதென்றே கருதற்பாலதாயிருக்கின்றது. இதற்குச் சம்பந்தப்பட்ட பெரியபுராணச் செய்யுள் வருமாறு:—

"சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசைவும்
கந்தமிசை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய" என்பதே.

[சம்பந்தமூர்த்திகள் புராணம் 270-ம் செய்யுள்]

சம்பந்தமூர்த்திகள் தம்மை தரிசிக்க அப்பமூர்த்திகள் வருவதைக்கேட்டு எதிர்கொள்ளச் செல்லுகையில் அப்பமூர்த்திகள் கொண்டிருந்த திருமேனியின் வேடத்தை இச்செய்யுள் கூறுகின்றது. இச்செய்யுளில் அன்பு, அசைவு, கருத்து, உழவாரப்படை, கண்ணீர், திருநீறு, இவ்வாறுவகைச்சிறப்போடு கூடிய திருவேடத்தை அப்பமூர்த்திகள் தாங்கிவந்ததாகக் கூறப்பட்டுளது. அடுத்த செய்யுளிலும் "கருத்திற் பரவு மெய்க்காதற், றொண்டர்திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே" என மேற்குறித்த அறுவகைச் சிறப்போடு கூடிய திருவேடத்தைச் சம்பந்தமூர்த்திகள் தொ

ழுததாக அருளப்பட்டிருக்கின்றது. தேகத்தில் முதிர்ந்தவயதால் உண்டாகும் நடுக்கம் சிறப்பாய் எடுத்துப் புகழ்ந்து வணங்கும் திருவேடம் என்பதின் பகுதியல்ல. அஃது குறைபாடே; திருவேடப் பொலிவைப் புகழவெழுந்த செய்யுள் இது...அதனுல் "அசைவு" என்ற பதத்திற்கு விருத்தாப்பியத்தா லுண்டான நடுக்கம் எனப்பொருள் கூறுவது பொருந்தாது. ஏனெனில் விருத்தாப்பியத்தின் நடுக்கத்துக்குத் திருவேடமெனப் பெயரிடுவது எலாது.

முதலாவது யாத்திரையே, 70—வயசுக்குமேல் தேகநடுக்கம் உண்டான பின்பு ஆரம்பித்திருந்தால், பின்னர் அளவில்லாத தலங்களைத் தரிசித்து, எண்ணிறந்த தேவாரப்பதிகங்களைப் பாடியதும், கைலாச யாத்திரை பாதசாரியாகச் சென்றதும் எலாதவையே யாகும். அப்பமூர்த்திகள் நம்போல் வயதுக்கடுத்த பாகுபாட்டின்படி யௌவனம், வார்த்திகம் இப்பருவங்களின் குணகுணங்களால் பீடிக்கப்பட்ட மூர்த்தியல்லர். விஷத்தை அமிர்தமாக உட்கொண்ட வச்சிரதேக முடையவர்; எழுநாள் நீற்றறையிலிருந்தும் சிறிதும் ஊறுபாடடையாது விளங்கியவர்; கல்லைத் தெப்பமாகக் கொண்டு கருங்கடலைக் கடந்த யோகீஸ்வரர்—பெரியபுராணத்தில் இம்மூர்த்திகள் சரித்திரத்தில் எங்காவது இம்மூர்த்திகளுக்கு வயோதிக தசையின் குறைபாடு கூறியிருப்பதாகவும் காணேம். ஆனுலோ இதற்கு எதிரிடையாகச் சுவாமிகள் சிவத்தோடு கலப்பதற்கு முந்தி அதாவது, 81—வது வயசில்தெய்வலோக அரம்பாஸ்திரீகள் பூலோகமடைந்து சுவாமிகளைவிஷய இச்சையில் காமுறமயக்கினுர்க ளென்றும் சுவாமிகளோ மயக்கமடையவில்லை யென்றுங் கூறுகின்றது.—இத்தியாதி காரணங்களினுல், திருவதிகையில், தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் சுவாமிகள் வசித்ததாகச் சொல்வது பொருத்த மிலாததெனவும், ஆன்றோர் பொருள் கண்டபடி ஆனந்த பரவசத்தாலாய தளர்நடை யென்றே மேற்காட்டிய "திருமேனி தனிலசைவும்" என்ற சொற்றொடருக்குப் பொருள் கொள்வதே பலவகையிலும் பொருத்த முடைய தெனவுங் காணப்படுகின்றது—இன்னமும் கல்வி வாணர்கள் ஆராய்ந்து விளக்கச் செய்வார்களென வேண்டுகிறேன்.

திரு-மா-சாம்பசிவம்பிள்ளை,
Retired Sub-Magistrate,
திருச்சிராப்பள்ளி.

குறிப்பு:—அப்பர் சுவாமிகளுக்குச் சூலைநோய் தீர்ந்த இடம் திருவதிகை. அதுவே யவர் பரமசிவத்தால் ஆட்கொள்ளப்பட்ட இடம். அங்கு பரமசிவத்தினருளால் தமது சூலைநோய் நீங்கப்பெற்றவமய முண்டான பக்தி மேலீட்டால் எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று தரிசிக்க அப்போதே புறப்பட்டார் என்பதே பொருத்தமாகுமன்றி முப்பது வருடகாலங்கள் அதே ஸ்தலத்தில் இருந்தார் என்பது

அவருடைய அருமைத் திருத்தொண்டின் பெருமைக்குப் பொருத்தமானதாகச் சற்றும் புலப்படவில்லை.

இதன்றி நமது நண்பர் கூறியவாறு வாகீசப்பெருமான் சாதாரண மனிதரைப்போல தேகத்தின் ஷட்பாவவிகாரங்களுள் ஒன்றாகிய முதுமையின் இடையூறுகளால் பீடிக்கப்பட்டார் என்று கருதுவதற்கு இடமில்லை. சாதாரணமான மனிதர்க்கே மனக்கலக்கம், துயரம், குறை இவைகளில்லாது சந்தோஷமாயிருப்பின் தேகம் சுகமாகவும் திடமாகவுமிருப்பது அனுபவம். அவ்வாறிருக்கச் சதா சிவானந்தமாகிய பிரமானந்த அமிர்தத்தையே யருந்திக்கொண்டிருந்தவரும், அதனால் கொடிய விஷமும், நீற்றறையில் வாசமும் சற்றேனும் இடையூறு செய்ய முடியாத தேகமுடையவரும், பிறகு சிவத்தோடு கலந்த எண்பத்தோராவது வயதிற்குச் சில (பெரும்பாலும் இரண்டொரு) வருடங்களுக்கு முன் கைலாயத்திற்குக் காலால் நடந்து செல்லும் தேகபலத்தோ டிருந்தவரும், பரமசிவத்தின் அருள்பெற்ற மகானுமாகிய அவர் தேகம் வயோதிகத்தால் தளர்ந்ததென்று கருதுவது பக்தியின் மகிமைக்கும் அருள் மகிமைக்கும் பொருத்தமாக இருக்கவில்லை.

சாதாரணமாக உலகில் கிழவரின் தேகத்தளர்ச்சியா லுண்டான தளர் நடையையும் தலை நடுக்கத்தையும் அழகென்று யாருங் கூறக்கண்டிலோம் கேட்டுமிலோம்.

நமது நண்பர் கூறியபடி "இன்னாளிற் றிருப்பணிகள் செய்கின்ற வின்றமிழ்க்கு......" என்றகவியின் இறுதியில் உள்ள, " தொடர்ந்தெழுவார் " என்ற வார்த்தைகளால், பல்லவ அரசன் சைவசமயம் புக்கு குணதரீச்சரம் என்ற ஆலயத்தை யமைக்கத்தொடங்கியபோதே நம் வாகீசப் பெருந்தகையார் பதிபலவுஞ் சென்றிறைஞ்சப் புறப்பட்டார் என்றே பொருள் கொள்ளக்கிடக்கிறது. இவையாவு மொருபாலிருக்க, சுவாமிகளின் திருவேடப் பொலிவைப் போற்றவெழுந்த செய்யுளில், " இடையறாவன்பும் " என்றதற் கடுத்தாற்போல் " திருமேனி தனிலசைவும் " என்று கூறப்பட்டிருப்பதாலே, பக்திப்பெருக்கா லுண்டாகும் ஆனந்த பரவசத்தின் காரியமான தளர் நடையென்று பொருள் கொள்வதே பொருந்தும். அதன் தொடர்ச்சியாய் கருத்தும், உழவாரப்படையும், ஆனந்த பாஷ்பமும், திருநீறும் கூறப்பட்டிருக்கின்றன. அந்த பாசுரத்தில் சம்பந்தமூர்த்திசுவாமிகள் அவ்வேடத்தைத் தொண்டர் திருவேடம் நேரேதோன்றிய தென்று தொழுததாகக் கூறப்பட்டிருக்கிறது.

" கண்டகவு ணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற்
றொண்டர்திரு வேடநேரே தோன்றியதென் றுதொழுதே
* * * * * "

(சம்பந்தமூர்த்திகள் சரித்திரம் 271-வது செய்யுள்)

இவற்றால் அப்பாசுரத்தில் அப்பர் சுவாமிகள் சிவவேடப் பொலிவைக் கூறவந்த சேக்கிழார் சுவாமிகள், அதில் அவருடைய வயோதிகத்தின் குறைபாட்டைச் சேர்த்துக் கூறியிருப்பார் என்று கருதுவது சேக்கிழாரின் அருள்வாக்குக்குள்ள மகிமையைக் குன்றச் செய்வதாகும் என்பதே நமது கருத்து.

பத்திரிகாசிரியர்.

மாதர் நீதி.

சகோதர சகோதரிகளே! கடந்த ஆவணிமாத சஞ்சிகையில் 55-வது பக்கத்தில், மலாக்காவிலுள்ள நமது சநாதநேயர் ம-ா-ா-ஸ்ரீ மா. மலையப்பன் என்பவர் தமிழகம் என்ற (கோலாலம்பூரில் வெளியாகும்) பத்திரிகையில் வெளியிட்டிருந்த ' மாதர்நீதி ' என்ற விஷயத்தையும் அதற்குத் தமிழகம் பத்திரிகையின் ஆசிரியர் வரைந்துள்ள குறிப்பையும் பிரசுரஞ்செய்து நமது குறிப்பையும் வரைந்திருந்தோம். அதிலுள்ள நமது குறிப்பைப்பற்றி "ஓர் பெண்பால்" என்ற கையெப்பத்தோடு சில விஷயங்கள் அத்தமிழகம் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

அதில் அம்மாது நம்மைபற்றித் தாழ்வாய்க் கூறிய விஷயங்கள் நாம் கவனிக்கத்தக்கவை யல்லவென ஒதுக்கித்தள்ளி, அதிலுள்ள விஷமத்தனத்தைமட்டும் கண்டித் தெறியவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் அம்மாதின் போதனை கற்பிலக்கணத்திற்கு நேர்மாறாக விருத்தலின் என்க.

நாம், மனைவி கணவனைத் தெய்வமாகக் கருதவேண்டு மென்று கூறியது அச்சகோதரிக்குச் செவியில் நாராசங்காய்ச்சி விட்டதுபோல் இருப்பதாகத் தெரிகிறது. அச்சகோதரி "மனைவி கணவனைத் தெய்வமாகக் கருதுவதாயின் கணவனும் மனைவியைத் தெய்வமாகக் கருதவேண்டும்" என்று கூறுவதோடு அதற்குத் திருட்டாந்தமாகப் " பரமசிவன் பார்வதியைக் கருதுவதுபோல " என்று கூறுவது நமக்குச் சொல்லொணா வியப்பையும், நகைப்பையும் உண்டாகுகிறது.

இச்சகோதரி எச்சமயத்தவ ரென்று நமக்கு விளங்கவில்லை. ஓர் இந்து மத மாதின் வாயில் " கணவன் மனைவியைத் தெய்வமென்று கருதவேண்டும் " என்றவார்த்தை கனவிலும் வராது. மேல்நாட்டு ஆடவர் தாம் மணம்புரிய விரும்பும் மாதை " என் பெண்தெய்வமே " (My Goddess) என்று கூறுவதும், அவர்கள் முன் முழங்காற் படியிட்டு வணங்குவதும் வழக்கம், ஆயினும் அவர்களும் வாழ்க்கையில் மனைவியைத் தெய்வமாக மதிப்பதாய் விளங்கவில்லை. பெண்சுகமே உலகில் சிறந்தசுகம் என்பது உலகாயதர் கொள்கை. இதனால் நமது சகோதரி அம்மதத்தைச் சேர்ந்தவரோ என்று சந்தேகிக்கிறோம். அப்படியாயின் அவ்வம்மையாரைப்பற்றி நாம் ஒன்றும் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனால் அப்படி யிருந்தால் அவ்வம்மையார் இதில் தலையிட வேண்டிய அவசியமில்லை. அவர் தமது மதத்தையேனும்

வெளியிட்டிருந்தால் ஹிந்துமாதர் அவர் போதனையைக் கவனியார்கள். இது அவர்களுக்குத் துர்ப்புத்தி கற்பிப்பதேயாகும்.

இச்சகோதரி 'சிவம் சத்தி'யை யிழுத்து வைத்துக் கொண்டதால் ஹிந்துதானோ என்ற ஐயம் உண்டாகிறது. ஆனால் இத்தகைய விபரீதக் கொள்கையுடைய ஒருமாது ஹிந்து என்று கூறிக்கொள்ள அருகராகார். பார்வதியைப் பரமசிவம் பெண் தெய்வமாகக் கருதியிருக்கிறாரென்று இவருக்கு யார்கூறியது? அப்பொய்யைத் திருட்டாந்தங் காட்டிக் கூறியது, (இச்சகோதரி கிருஸ்தவராயின்) நம்மதத்தையும் ஆசாரத்தையும் இகழ்ந்து கேலிசெய்ததேயாகும்.

அந்தோ கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்ப மேன்? சிவத்துக்கும் சத்திக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி இச்சகோதரிக்கு என்ன தெரியும்? அவ்வம்மையாருக்குத் தமது கணவன் தம்மைத் தெய்வமாய்க் கருதி அர்ச்சனை செய்யவேண்டு மென்று பிரியமிருந்தால் அப்படிச் செய்து கொள்ளட்டும். ஆனால் இருவரும் ஒருவரையொருவர் தெய்வமாகக்கருதிவிட்டால் வணங்கி உபகரிப்பது யார்? அதை யேற்றுக்கொள்வது யார்? என்பதே நமக்கு விளங்கவில்லை. பிறகு இந்த இரண்டு தெய்வங்கட்கும் உற்பத்தியாகும் குட்டித் தெய்வங்களுக்கு யார் தெய்வம்? அந்தோ பெண்மதியே! பரிதாபம்! பரிதாபம்!

நமது மதத்தில் கற்பைப்பற்றி அவ்வளவு சிறப்பித்துக் கூறியிருப்பதும், மாதர் கணவரைத் தெய்வமாய்க் கருதவேண்டு மென்பதும், நமது பெண் மக்களின் நன்மையைக் கோரியேயாகும். தெய்வவல்லமை பெற்று அழியாப் புகழும் பெற்ற கற்பரசிகளின் சரிதைகளே அதற்குப் போதிய சான்றாம். ஒருவன் தன் மனோபாவனையில் எவ்வாறு நம்பி நடக்கிறானோ அவ்வாறே பலனடைகிறான். கணவனும் மனைவியைத் தன் உயிர்போல் கருதி அன்போடு ஆதரித்து வரவேண்டுமென்பதே நமது மதக்கட்டளை; அவனும் அவளை யலட்சியமாகவாவது குரூரமாகவாவது மரியாதைத் தாழ்வாயாவது நடத்தலாகாது. சாதாரணமாய் நமது நாட்டில் கல்வியில்லாப் பாமரன்கூட தன்மனைவி குழந்தையோடு எங்கேனும் நடந்து செல்லும்போது பளுவான மூட்டையையும் குழந்தையையும் அவன் சுமந்து செல்வதையும், மனைவி பின் செல்வதையும் காணலாம். ஆனால் கணவன் காட்டுவது அன்பு; மனைவி காட்டுவது பக்தி; அதாவது வணக்கத்தோடு கூடிய அன்பு.

ஹிந்து சகோதரிகளே! இச்சகோதரி கூறியதுபோன்ற ஆபாசக் கூற்றுகளுக்குச் செவி கொடாதேயுங்கள். மணலைச் சாதமாய்ச் சமைத்தளித்தவரும், "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" என்றவரும், கற்பரசியென யாவராலும் வணங்கப்பட்டவருமாகிய வாசுகி யம்மையாரின் கணவரும், தெய்வீகப் புலமை வாய்ந்த பொய்யாமொழியாருமாகிய நாயனார் கூறிய வேதவாக்காகிய,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை "

என்ற அமுதமொழியைக் கடைப்பிடித் தொழுகிக் கற்பரசிகள் என்ற கீர்த்தியை யென்றும் நிலைக்கச் செய்யுங்கள்.

பத்திரிகாசிரியர்.

விதி வலிது.

ஆம், விதிவலிதுதான். நாம் ஒவ்வொருவரும் அதன்படி நடந்தே தீருகிறோம். அதை வெல்லுவ தென்பது நம்மாலாகாத காரியம். அதை விலக்குவதற்காக நாமொரு காரியத்தைச் செய்யின், அவ்வழியிலேயே அது வந்துசம்பவிக்கிறது. அதை ஒருவரும் வெல்லமுடியாது. ஏனெனில் 'விதி' யென்பது நாம் முற்பிறப்பிற்செய்த, பாப புண்ணிய கர்மங்களுக்குத் தக்கபடி "இவ்விதமாக அனுபவிக்க வேண்டும்" என்று ஈசனால் விதிக்கப்பட்டது. 'மதி' யென்பது நம்முடைய அறிவு; புத்தி யென்று கூறலாம். நாம் பூர்வத்திற் செய்த கர்மங்களுக்குத்தக்க பலனை யனுபவிக்கவே இப்பிறப்பில் நமக்கு புத்தியும் ஏற்படுகிறது. இதையறிந்தே பெரியோர்கள் 'விதி யெவ்வழி மதியவ்வழி' யென்றும், 'விநாசகாலே விபரீத புத்தி' யென்றும், 'புத்தி கன்மாநுசாரணி' யென்றும் கூறியதோடு, பின்வரும் நூல்களிலும் 'விதிவலிது' என்பதை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

" முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினு
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார் " (கந்தபுராணம்)

" அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவச மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ " (இராமாயணம்)

" மதியினை மலரச் சூழ்ந்து வருந்தித்தாம் படைக்கப் பட்ட
நிதியினை நுகர்து மென்று நினைத்தினி திருந்த போழ்திற்
பதியினைக் கலக்கிச் சென்று பறித்துத்தாம் பிறர்க்கு நீட்டும்
விதியினை விலக்க மாட்டா மெலிபவால் வெளிய நீரார் "(சூளாமணி)

" ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன் "

" எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமங்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததென்
முற்பவத்திற் செய்த வினை " (மூதுரை)

" தாந்தாமுற் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
யொறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி " (நல்வழி)

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். " (திருக்குறள்)

இன்னும் பலவுள. ஆயினும், விரிவஞ்சி இத்தோடு நிறுத்துகின்றோம். மேற்கண்ட முதுமொழிகளின் ஆழ்ந்த கருத்துகள் நமக்குப் புலப்படும்படி தயவுசெய்து மற்றொரு முறையும் வாசித்து கருத்தில் வைக்கக்கோருகிறோம். ஆ! விதியின் வலிமையே வலிமை!

மார்க்கண்டேயர் தமது மரணத்திலிருந்து விடுபட்டதினால் 'மதியே வலிமையுடையது' என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அதைப் பற்றி ஆராயுமிடத்து, அதுகூட இன்ன காலத்தில் 'இன்னபடி நடைபெறவேண்டும்' என்று விதி யிருந்ததாகவே தெரிகிறது. சுருதி யவ்விதமில்லையாயினும், யுக்திக்குப் பொருந்தத்தக்க ஆதார மொன்றிருக்கிறது. என்னவெனில், "தன்னுடைய ஜீவியகாலத்திலேயே நேர்ந்திராததும், தன்னுடைய உயிருக்கே கேட்டை விளைவிக்கக் கூடியது மான ஒரு மகத்தான விபத்தை, எமன் விதியில்லாமல் அனுபவித்திருப்பானா?" வென்பதே. மார்க்கண்டேயரைக் காரணமாகக்கொண்டு எமனுடையவிதி நிறைவேற வேண்டுமென்று, ஏற்கனவே ஈசன் விதித்திருந்து, நடத்தியதாகவே கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆம், 'அவனன்றி யோரணுவும் அசையாது' அல்லவா? "மார்க்கண்டேயரே தம்முடைய மதியினால், தெய்வசித்தத்தை அல்லது தெய்வ கட்டளையைத் தடுத்துவிட்டார்" என்று நாம் எப்படிக் கூறுவது?

இதைக்கூட "சாஸ்திரத்திலில்லாத ஒரு விஷயத்தை நாம் எவ்விதம் நம்புவது" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால், மார்க்கண்டேயரைப் போல், "ஈசன் வேறு, தான்வேறு" என்றெண்ணாமல், "நானே அவன், அவனே நான்" என்ற அனன்னிய நிலைமையில் பக்தியைச் செலுத்தும் பாக்கியம் பிராப்தமின்றி லபிக்காது.

சகோதர சகோதரிகளே! இதுவரை நாம் அறிந்துகொண்ட தென்னவெனில், 'விதி வலிமையுடையது' என்பதே. ஆயின், இனி நாம் செய்ய வேண்டியதென்ன! நல்வினை யிருந்தால், நல்லவை வரட்டும், தீவினையிருந்தால் தீயவை வரட்டுமென்று அவற்றை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதல்ல,

" அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படி வருமோ சலியாதிரே னேழை நெஞ்சே "

என்பதும், 'வருவது வந்தால் படுவது படு' என்பதும், 'எவை வரினும் வருக சலியாது சகிப்போம்' என்பதும் பட்டினத்தடிகளைப்போல நாமும் மண், பெண், பொன், கீர்த்தி முதலிய பற்றற்று, பரிபக்குவமடைந்த நிலைமையில், நம்மை நோக்கி நாமே கூறிக்கொள்ளத்தக்கது. நமது மனதிற்கு இப்பொழுது அத்தகைய சத்துவ குணங்கள் சிற்சில சந்தர்ப்பங்களில் மட்டுமே தோன்றி, மறைந்து பெரும்பாகம் பிரவிர்த்தியையே நாடிக்கொண்டிருப்பதால், நாம் அவ்விதமிருக்க முடியாதன்றோ? ஆகவே நாம் இப்பொழுது விதிவலிது எனினும் முயற்சியைக் கைவிடாது, ஊக்கத்துடனுழைத்து, நற்பயன்களை யடையப் பிரயாசைப்படவேண்டியதே சிறந்தவழி. மதியால் முயன்று விதியை யடியோடு தடுக்க முடியாதெனினும் விதியின் கடுமையைச் சகிப்பதிலுள்ள கஷ்டத்தையேனும் குறைத்துக்கொள்ளலாம். திருக்குறளில் இவற்றைப்பற்றிய அதிகாரத்தில்,

" தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலிதரும் " என்றும்

" ஊழையு முப்புறங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர் " என்றும்

நாயனார் கூறியுள்ளார். இவற்றின் முக்கிய கருத்து 'விதியில்லை யாயினும் முயற்சியைக் கைவிடத்தக்கதல்ல' வென்பதே.

ஆகவே, சகோதரர்காள்! நாம் விதிப்பயனைக் கருதாமல், முயற்சியோடு கூடி உழைக்க வேண்டும். அவ்விதம் செய்தால், நமக்கு ஊழில்லாவிடினும் முயற்சிக்குத் தகுந்த கூலியாகவாவது ஈசன் சிறிது கருணை பாலிப்பான். அவற்றை, நாம் இப்பிறவியிலேயே அனுபவிக்க முடியாவிடினும், 'மறு பிறப்பிலேனும் அனுபவிப்போம்' என்பது சத்தியம்.

அவ்வளவேயன்றி, "விதிபெரிதா? மதிபெரிதா?" என்றால் எவற்றைப் புளியங் கொட்டை யளவென்றும், பூசனிக்காயளவென்றும் கூறுவது? "உருவத்திலல்ல, சக்தியில்" என்று வினவினாலோ அதற்கும் வழியில்லை. ஏனெனில் "இருள்பெரிதா? ஒளி பெரிதா?" வென்றால், எவற்றைப் பெரிதென்று கூறமுடியும்? ஆனால், "நல்லது எது?" என்று வினவினால் "ஒளி நல்லது" என்று கூறலாம். அதைக்கூட காமுகரும் கள்வரும் ஒப்புக்கொள்வதில்லை. நாம் என்ன செய்யலாம்! இவற்றிற்கே 'பொழுது போக்கும் வீண் குதர்க்கங்கள்' என்று பெரியோர் பெயர் கொடுத்தனர்.

ஆகையால், எம்போன்ற மாணவ சகோதரர்களே! நாம் நம்முடைய வாழ்நாட்களை, வீண்நாட்களாகச் செய்யாமல் 'விவகாரம் பேசுதல்' என்ற நிலைமையைவிட்டு, 'சந்தேகந் தெளிதல்' என்ற நிலைமையில் நின்று, நம் பெரியோர்களை யடுத்து, உண்மையை அறிந்து, அறிந்தபடி யொழுகி, நல்வழியைச் சார விடையேறும் பசுபதியாகிய அருட் பெருஞ்சோதி யருள் புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக!

குற்றங்களைந்து குணத்தைக் கொள்ளுதல் கற்றவர்க்குற்ற கடன்.

கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை,
திருச்சிராப்பள்ளி.

குறிப்பு:—நமது நண்பர் கூறியது யாவரும் அறிந்து கைக்கொண்டொழுக வேண்டிய ஒரு சிறந்த நற்போதனையே யாகும். ஆனால் இதில் ஒருவிஷயத்தை மட்டும் நாம் மறுக்கவேண்டியது அவசியமா யிருக்கிறது. ஏனெனில் அது மோக்ஷ இச்சைகொண்டு ஞான அப்பியாசத்தில் முயல்வோர்களுடைய சிரத்தையைக் குறைத்து விடும். அதை வெளியிடாது விட்டுவிடலாமே, ஏன் வெளியிட்டு மறுப்பெழுத வேண்டு மென்று சிலர் கருதலாம். இதனால் வியாசமனுப்பியவர் மனம் வேதனைப்படுமே என்றும் நினைக்கலாம். ஆயினும் இன்னும் அனேகர் அந்தத்தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களாதலால் யாவர்க்கும் அதை யறிவிக்கவேண்டியே இவ்வாறு செய்யவேண்டியதாயிற்று. அதோடு இந்த வியாசம் அனுப்பிய நண்பர் நமது செய்கையால் மனவருத்தமடையாமல் நமது வாக்கை குருவுபதேசமாய் ஏற்றுக் கொள்பவர் என்று நாமறிவோம்.

அந்த விஷயம் எது வெனில்,

" 'ஈசன்வேறு நான்வேறு' என்றெண்ணாமல் 'நானே அவன், அவனே நான்' என்ற......பாக்கியம் பிராப்தமின்றி லபிக்காது" என்ற விஷயமே.

ஞானம் ஒருபோதும் பிராரப்த அமைப்பின்படி வருவதல்ல. அது ஒன்று மட்டும் நாம் முயற்சி செய்தே யடையவேண்டும். பிராரப்தம் என்பது கர்மத்தின் பலன். ஞானம் கர்மத்தால் வருவதல்ல. இச்சையோடு செய்யும் ஆகாமிய கர்மங்களே சஞ்சிதமாகின்றன. போன ஜன்மத்தில் செய்த சஞ்சிதமாகிய மூட்டையை இப்போது பிராரப்தம் என்ற பெயரால் அனுபவிக்கிறோம். கருமத்திலிருந்து விடுபடுவதே முத்தி — பிராரப்த பலன் நமது முயற்சியில்லாமல் தானே வரும். தடுத்தாலும் போகாது. விருப்போடேயோ விருப்பு வெறுப்பின்றியோ யதை யனுபவித்தே தீர வேண்டும்.

ஞானத்தை மட்டும் நமது முயற்சியால்தான் (முயற்சியின் அளவிற்குத் தக்கபடி ஒரு ஜன்மத்திலோ பல ஜன்மங்களிலோ) அடையவேண்டும்.

ஆனால் பிராரப்தத்திற்கு பலம் அதிக மாதலால் கெட்ட பிராரப்தம் அதிக மிருந்தால், அதாவது பல ஜன்மங்களை யளிக்கும் வன்மையுடையதாயின், கடைசிஜன்மம்வரை ஞானம் கிட்ட ஒட்டாது தடுக்கும். நிருவிகற்ப நிட்டையி லிருந்தாலும் வெளிக்கிளப்ப அதற்குச் சக்தியுண்டு— அவ்வளவேயன்றிப் பிராரப்தத்தால் ஞானம் வராது. இன்னும் விரிக்கின் பெருகுமென அஞ்சுகிறோம். மார்க்கண்டேயர் விஷயம் பொது விதியாய் எடுத்துக் கொள்ளத்தக்கதல்ல. எல்லாரும் மார்க்கண்டரல்ல — எல்லா விதிகளுக்கும் எங்கேனும் ஒரு விலக்குண்டு — விதி முடிந்தே யாவரும் மடிகிறார்களென்பது பொதுவான நியதி. தேகத்தைவிட்டு நீங்கிய உயிர் மறுபடி யத்தேகத்திற்குள் வராது என்பது நியதி. அப்படியிருக்க அப்பர், சம்பந்தர், சுந்தரர், பட்டினத்தடிகள் இவர்கள் இறந்தவர்களை எழுப்பி யிருக்கிறார்கள். ஆகையால் மார்க்கண்டேயர் திருஷ்டாந்தம் இதற்குப் பொருந்தாது.

பத்திரிகாசிரியர்.

"கோடாலிக் காம்பு குலத்துக் கீனம்"

மரத்தைப் பிளக்கும் கோடாரி இரும்பாற் செய்யப்பட்டது. அதுவே மரத்தைப் பிளக்கிறது; அழிக்கிறது. ஆனால் அதன் காம்பாகிய மரமே அதில் நுழைந்து கொண்டு தன் இனமாகிய மரங்களையழிக்க உதவிசெய்கிறது.

அதைப்போலவே மனிதரிலும் கோடாரிக்காம்புகள் உண்டு. மனிதரில் சிலர் தங்கள் ஜாதிக்கோ நாட்டிற்கோ பிரதிகூலம் செய்கிறவர்களோடு சேர்ந்து கொண்டு, தங்கள் சுயலாபத்தை மட்டுமே கருதி, தங்கள் ஜாதிக்கும் நாட்டிற்கும் தீங்கிழைக்கிறார்கள். இத்தகைய மாபாதகர்க்கே கோடாலிக்காம்புகள் என்று பெயர். இவர்கள் தங்கள் குலத்திற்கே தீங்கு செய்வதால் "கோடாலிக்காம்பு குலத்துக்கீனம்" என்ற பழமொழி உண்டாயிற்று. அந்தோ காலவித்தியாசத்தால் — கலிகாலக் கொடுமையால் — நம் புண்ணிய பூமியில் இப்போது இச்சாக்கு மிக்க மலிவாய்விட்டிருக்கிறது.

தாய் நாட்டின் நன்மைக்கு இவர்கள் ஒரு உதவியும் செய்யாவிட்டாலும், அதற்காக உழைப்பவர்களோடு சேர்ந்து வேலை செய்யாவிட்டாலும் சும்மாவாவது இருக்கலாமல்லவா? அதை விட்டுத் தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி அவ்வழியில் நடப்போரைத் தடுப்பானேன் என்பதே நமக்கு

விளங்கவில்லை. அப்படிச் செய்து தேச நன்மைக்கே பாடுபடும் பெரியோரின் சாபத்துக்காளாகிறார்களே யென்று ஒரு புறம் இவர்களுக்காக இரக்கங்கொள்ள வேண்டியதாகவு மிருக்கிறது.

அந்தோ! இப்போது உலகிலுள்ள நாடுகளில் நம் ஒரு நாடுதவிர மற்ற யாவையும், முக்கியமாகிய மேல்நாடுகளும், ஜபான் முதலியவையும் கூடிய வரையில் க்ஷேம நிலைமையிலேயே யிருக்கின்றன. ஏனெனில் அந்நாட்டார்கள் தங்கள் தாய்நாட்டின் மேல் அபிமானமும் அதன் முன்னேற்றத்திலேயே கருத்தும், நாட்டமும், ஊக்கமும் வைத்திருந்து நடந்துகொள்கிறார்கள். ஒரு இங்கிலீஷ்காரன் அன்னிய நாடு சென்றிருந்தால் அங்கு தனக்கு வேண்டிய ஒரு சாமானை வாங்குவதாயின் தன் நாட்டிற்செய்தது கிடைக்காவிட்டால்தான் அன்னிய நாட்டுச் சாமானை வாங்குவான். அது இருக்கும்போது அதைப் புறக்கணித்துவிட்டு அன்னிய நாட்டுச் சாமானை வாங்க ஒருபோதும் அவன் மனம் இடந்தராது. அப்படிச் செய்வதைத் தேசத் துரோகமாய் அவன் கருதுவான். அதுதான் தேசபக்தி.

இப்போது நம் நாடு இத்தகைய தரித்திர நிலைமையி லிருப்பதற்குக் காரணம், நம் நாட்டில் கைத்தொழில் (பல காரணங்களால்) குன்றிப்போனதும் அதனால் நாம் செலவிடும் பணத்தில் பெரும்பாகம் அன்னிய நாடுகளுக்குச் செல்வதுமே யாகும். இப்போது தான் நமது நாட்டார் கொஞ்சம் கண்விழித்து முன் உன்னத நிலையில் இருந்த நம் நாட்டுக் கைத்தொழில்களை உயிர்ப்பிக்க முயல்கிறார்கள். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத முக்கியப் பொருள்கள் உணவும் ஆடையுமாகும். மற்றவை பெரும்பாலும் விசேஷ போகங்களைச் சேர்ந்தவைகளே யெனலாம். எந்த நாடு தனக்கு வேண்டிய உணவையும் ஆடையையும் உற்பத்திசெய்து கொள்ளாமல் அவைகளுக்காக அன்னிய நாட்டை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதோ அந்த நாடு யாவற்றினும் கீழானதேயாகும். அதற்கெவ்வித கௌரவமும் மதிப்பும் கிடைக்காது. அது அன்னியரால் மிக்க கேவலமாய்க் கருதப்படும். ஒரு மனிதன் தனக்கு வேண்டிய உணவையும் உடையையும் சம்பாதித்துக்கொள்ளாமல் அன்னியர் ஆதரவில் அவற்றைப் பெறுவானாயின் அவன் எவ்வாறு அவமதிப்படைவானோ, எப்படி யாவராலும் கேவலமாய் மதிக்கப்படுவானோ அவ்வாறேதான் மேற்கண்ட நாட்டின் கதியும்.

அந்தோ! இத்தகைய அவமானமான நிலைமை நமது நாட்டாரில் அனேகருக்கு மனதில் உறுத்தாமலே யிருப்பது என்ன பரிதாபம். ஒருவனை அவன் சொந்தச்சுற்றத்தானே "அடே அனாதை! பசியை யடக்கச் சோற்றுக்கும் மானத்தை மறைக்கக் கந்தைக்குங்கூடக் கையேந்தி நிற்பவனே!" என்றால் அவன் எவ்வளவோ உரோஷம் வந்து சொன்னவனை யடிக்கப்போவான்-உடனே அறிவு உதித்துத் தன் உணவையும் ஆடையையும் கூலிவேலை செய்தாவது சம்பாதித்துக்கொள்வான். அந்தோ! இப்போது நாம் அந்த நிலைமையில்தான் இருக்கிறோம் என்பதை யுணர வேண்டாமோ.

